# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 07 புதன்கிழமை (24-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:332


தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

# வடக்கில் நீதியான தேர்தலுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்!

## வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களும் அதிக எண்ணிக்கையில் அனுப்பப்படுவர்

கொழும்பு,ஒக்ரோபர்24

**யாழ்.மாவட்டத்திலும் தேர்தல் நீதியும் நியாயமுமாக நடத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் அங்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும். ஏனைய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகளை விடவும் அங்கு பாதுகாப்பு தீவிரமாக இருக்கும்.**

**அங்கு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களும் கூடுதலாக அனுப்பப்படுவர்; உள்நாட்டுக் கண்காணிப்பாளர்களையும் அதிகளவில் ஈடுபடுத்துமாறு அறிவுறுத்தவுள்ளேன்.**

**தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே தேர்தல் ஆணையாளர் மேற்கண்ட தகவல்களை வெளியிட்டார். அங்கு அவர் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தின் கீழான தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படும் வரை அந்த ஆணைக்குழுவின் அதிகாரம் தேர்தல் ஆணையாளரிடம் இருக்கும். அதன் அடிப்படையில் எனது அதிகாரத்தை முழு அளவில் பயன்படுத்தி நீதியும் நேர்மையுமான தேர்தல் ஒன்றை நடத்துவேன்.

✪ பலவந்தமாக வாக்குகளைப் போடவோ, ஏனையோர் வாக்குப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் ரெலோ உறுப்பினர் இருவர் கைது!

வவுனியா,ஒக்.24

வவுனியா தோணிக்கல் பகுதியிலுள்ள ரெலோ அலுவலகத்தை நேற்று சுற்றிவளைத்த படையினர், அந்த அமைப்பின் உறுப்பினர்கள் இருவரைக் கைது செய்துள்ளனர்.

மது, வெள்ளை ஆகிய இரண்டு பேருமே கைது செய்யப்பட்டனர்.

நேற்று பூமாங்குளம் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் தப்பியோடிய இளைஞர் குறித்து விசாரிப்பதற்கே ரெலோ உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதாக பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (க-4)

## வவுனியாவில் கிரனேட் வீச்சு; பொலீஸார் மூவர் காயம்

### பதில் தாக்குதலில் இரு இளைஞர் பலி

வவுனியா,ஒக்.24

வவுனியா, பூமாங்குளம் பகுதியில் நேற்றுக் காலை ஓட்டோவில் வந்த இனந்தெரியாதவர்கள் நடத்திய கிரனேட் வீச்சில் 3 பொலீஸார் காயமடைந்தனர்.

அவ்வேளை பொலீஸார் நடத்திய பதில் தாக்குதலில் ஓட்டோவில் வந்த இளைஞர் இருவர் கொல்லப்பட்டனர் என்றும் -

மற்றோர் இளைஞர் காயமடைந்த நிலையில் தப்பிச் சென்று விட்டார் என்றும் பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பூமாங்குளம் - உக்கினாங்குளம் வதியில் சைக்கிள்களில் வந்த பொலீஸார் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர் என்றும் -

அச்சமயம் அவ்வழியே வந்த ஓட்டோவில் இருந்தவர்களே கைக்குண்டை பொலீஸார் மீது வீசினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்ட இளைஞர்களிடம் இருந்து ஒரு பிஸ்ரல், 5 கைக்குண்டுகள், கடித்த நிலையில் சயனைட் குப்பி ஒன்று போன்றவை கைப்பற்றப்பட்டன என்றும் -

காயமடைந்த மற்றைய இளைஞர் ஆயுதங்களுடன் தப்பிச் சென்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்று இராணுவ நடவடிக்கை

மட்டக்களப்பு,ஒக்.24

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் நேற்று மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் மண்டூர், களுவாஞ்சிக்குடி ஆகிய அதிரடிப்படை முகாம்களில் இருந்து புறப்பட்ட படையினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான பழுகாமம், பெரியபோரதீவு, அம்பிலாந்துறை வரை சென்று பிற்பகல் ஒருமணிக்கு முகாம் திரும்பினர்.

சுமார் எட்டு மைல் தூரம் சென்ற படையினர் அம்பிலாந்துறைச் சந்தியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் நினைவாலயத்தையும் பழுகாமம், பெரியபோரதீவு ஆகிய இடங்களில் உள்ள சில கடைகளையும் உடைத்துச் சேதமாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. சுமார் 2 மணி நேரம்

(12 ஆம் பக்கம் பார்க்க)



ஷெல் வீச்சில் காயமடைந்த பொதுமக்களில் சிலர் மட்டக்களப்பு போதனா ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதைப் படத்தில் காண்கிறீர்கள்.

## துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி இளைஞரைப் பிடித்தனர் பொலீஸார்

### யாழ்நகரில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.24

கஸ்தூரியார் வீதி - நாவலர் வீதிச சந்திக்கு அருகில் நேற்றுப் பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

யாழ்நகரப் பகுதியில் இருந்து கஸ்தூரியார் வீதி வழியாகச் சைக்கிளில் சென்ற இளைஞரை வாகனத்தில் பின்தொடர்ந்த பொலீஸார், அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சூட்டுக்கு இலக்காகிப் படுகாய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் வீச்சில் இருவர் உடல் சிதறிப் பலி! குழந்தை உட்பட எட்டுப் பேர் படுகாயம்!!

### மட்டு. அம்பிலாந்துறையில் பரிதாபம்

மட்டக்களப்பு,ஒக்.24

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று அதிகாலை 3.30 மணிமுதல் நண்பகல் வரை படையினர் மேற்கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கையின் போது ஏவப்பட்டதாகக் கருதப்படும் ஷெல்கள் மக்கள் குடியிருப்புகள் அமைந்துள்ள அம்பிலாந்துறை, தும்பன்கேணிப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததில் இருவர் உடல் சிதறிப் பலியானார்கள். எட்டு மாதப் பெண் குழந்தை மற்றும் இரு பெண்கள் உட்பட எட்டுப்பேர் படுகாயமடைந்தனர்.

விவசாயிகளான சதாசிவம் கமலநாதன் (வயது 41), தம்பிமுத்து மகேசன் (வயது 37) ஆகிய இருவருமே உடல் சிதறிப் பலியாகினர்.

காயமுற்ற எண்மரின் விவரம் வரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாதகலில் நேற்று இரு படையினர் விபத்தில் பலி!

யாழ்ப்பாணம் ஒக்.24

மாதகல் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் இரண்டு கடற்படையினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

மாதகல் வீதியால் கடற்படையினர் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக நின்ற பனை மரத்துடன் மோதியது என்றும் -

இந்தச் சம்பவத்தில் அதில் பயணஞ்செய்த இருவரும் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர் என்றும் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்றொழிலாளரின் போராட்டத்தால் வடமராட்சி முற்றாகச் செயலிழந்தது

வடமராட்சி,ஒக்.24

வடமராட்சி வட பிரதேசக் கடலில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளையும் தடைகளையும் நீக்கி, சுதந்திரமாக தொழில் செய்ய அனுமதிக்குமாறு கோரி வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினரால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தால் மற்றும் மறியற் போராட்டம் காரணமாக வடமராட்சிப் பிரதேசம் முற்றுமுழுதாகச் செயலிழந்தது.

ஹர்த்தாலை ஒட்டி வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள பருத்தித்துறை, மந்திகை, உடுப்பிட்டி, நெல்லியடி ஆகிய பட்டினப் பகுதிகளிலும் மற்றும் கிராமப் புறங்களிலும் உள்ள வர்த்தக நிலையங்கள், சந்தைகள், தேநீர்க் கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்கள் மற்றும் வடமராட்சி சிற்றூர்தித் சங்கத்தின் மினி பஸ்கள் அனைத்தும் சேவையில் ஈடுபடவில்லை. இதனால் வடமராட்சிக்கும் ஏனைய இடங்களுக்குமான போக்குவரத்துத் தடைப்பட்டது.

அரச அலுவலகங்கள், கூட்டுறவுச சங்கங்கள், வங்கிகளும் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகளும் மாணவர் வரவின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

வல்வெட்டித்துறை, குடத்தனை ஆகிய பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான மக்கள் பதாகை

(2 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வடமராட்சிப் பிரதேசத்தில்

# டெங்கு, மலேரியா ஒழிப்புக் குறித்து கிராம ரீதியாக பிரசார நடவடிக்கை

தென்மராட்சி,ஒக்.24

வடமராட்சிப் பிரதேசத்தில் டெங்கு, மலேரியாக் காய்ச்சல்களை முற்றாக ஒழிப்பதற்கான பிரசார நடவடிக்கைகளை சுகாதாரத் திணைக்களததினர் மேற்கொண்டு வருகின்றனர்.

சுகாதாரத் திணைக்களத்தின் ஒலி பெருக்கி பொருத்தப்பட்ட வாகனம் ஒன்றில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை பற்றி மக்கள் கூடும் இடங்களில் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது.

வடமராட்சிப் பிரதேசத்தின் அனைத்துக் கிராமங்களிலும் இப்பிரசார நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)


சுடர் ஒளி

28-10-2001 இதழில்

- குடாநாட்டுத் தேர்தலில் புலிகளின் வியூகம்.
- தேர்தல் கூட்டமைப்புக் குறித்து சித்தார்த்தனின் சித்தாந்தம்.
- 'ஓயாத அலைகள்' வெளிவராத தகவல்கள்.
- நிமலராஜன் கொலையாளிகள் இன்னும் பிடிபடாத மர்மம்.
- ஜீவாவுக்கு யாழ்.பல்கலைப்பட்டம்: தமிழுக்கு அவமதிப்பு.
- அமெரிக்க - ஐரோப்பிய நாடுகளை உலுப்பும் உயிரியல் கிருமிப்போர்.

மற்றும் இலவச மருத்துவ ஆலோசனை. சிறுவர் பகுதி. விளையாட்டு உட்பட பல சுவையான அம்சங்கள். (C-18833)

வாசிக்கும் இதயங்களை யோசிக்க வைக்கும் ஒரே ஒரு பத்திரிகை





இதயந் திறந்து அழுகின்றோம்

எமது பாடசாலையின் பழைய மாணவரும்
எங்கள் ஆதர்ச மனிதருமான
பேராசான்
செ. பாலச்சந்திரன்
அவர்களே!

நீங்கள் கலைப்பீடாதிபதி என்ற போது,
நாங்கள் தோள்களை நிமிர்த்திக் கொண்டோம்.
நீங்கள் மறைந்து விட்டீர்கள் என்ற போது,
எங்கள் இதயங்களைச் சோகத்தில் நிறைத்துக்கொண்டோம்.

வேலணை மேற்கு,
வேலணை.

பாடசாலைச் சமூகம்
யா/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்.

(93781)


## நெல்லியடி பொதுச் சந்தை திறப்பு விழா

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் நெல்லியடி நகர்ப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுச் சந்தைக் கட்டடத் தொகு எதிர்வரும் 29ஆம் திகதி திறந்து வைக்கப்படும்.

பிரதேச சபைத் தலைவர் த.ஜெயராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கா.வே.குகேந்திரன் முதன்மை விருந்தினராகவும், யாழ்பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ரீ.வீ.கிருஷ்ணசாமி, கரவெட்டி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (க-117)

## கோப்பாய் மாணவர் தொடர்ந்து விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஒக்.24

கடந்தமாதம் 18 ஆம் திகதி வீட்டில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவனான காந்திராஜ் நிரோசன் (வயது18) நேற்று இரண்டாவது தடவையாகவும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவரை நவம்பர் மாதம் 6ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார். (க-10-ரி)

## மட்டுநகரில் தேடுதல்

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளான பாண்டவர் வெளி, ஞானசூரியன் சதுக்கம், இருதயபுரம், ஊறணி ஆகிய இடங்கள் நேற்றுப் பொலீஸாராலும், புலனாய்வுப் பிரிவினராலும் சுற்றிவளைக்கப்பட்டு பெரும் தேடுதல் நடத்தப்பட்டது.

இந்தச் சுற்றிவளைப்பினால் நேற்று நகரின் இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது. எனினும் எவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவரவில்லை. (க-4)

## யாழ்.மாநகரசபை நிமலராஜனுக்கு அனுதாபப் பிரேரணை

யாழ்ப்பாணம்;ஒக்,24

மறைந்த பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனுக்கு அனுதாபம் தெரிவித்து யாழ்.மாநகர சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்திலேயே இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

புளொட் அமைப்பின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் எஸ்.ஜெயச்சந்திரனால் முன்வைக்கப்பட்ட இந்த பிரேரணையை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. (க-9-4)

## கடற்றொழிலாளரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் பருத்தித்துறை நகர்ப் பகுதிக்கு ஊர்வலமாக வந்தனர்.

### படையினர் தடுத்தனர்

சக்கோட்டைப் பகுதியில் இருந்து ஊர்வலமாக வந்த மயிலிட்டிப் பகுதி மீனவர்களை வியாபாரிமூலையில் வைத்துத் தடுத்த படையினர் அவர்களைத் திருப்பியனுப்ப முயன்றனர். எனினும் அவர்கள் வேறு பாதையூடாக பருத்தித்துறையை வந்தடைந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் நேற்றுக்காலை பருத்தித்துறை நகரில் திரண்டு பருத்தித்துறை பிரதேச செயலகம், பருத்துத்துறை டிப்போ ஆகியவற்றின் முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபட்டு அலுவலகங்களை இயங்கவிடாமற் செய்தனர்.

காலை 10 மணியளவில் ஊர்வலமாகச் சென்று பருத்தித்துறை பஸ் நிலையம் முன்றிலில் அவர்கள் ஒன்றுகூடினர்.

இதனைத் தொடர்ந்து பகல் 12 மணியளவில் கூடியிருந்த மக்கள் மத்தியில் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசச் செயலாளர் சூரியகுமாரன் உரையாற்றினார்.

### போராட்டம் விரிவடையும்

வடமராட்சி வடக்கு கடற் பிரதேசத்தில் தடைகளை நீக்கி சுதந்திரமாக கடற்றொழில் செய்ய அடுதத ஒரு வாரகாலத்துக்குள் அனுமதிக்க வேண்டும். இல்லையேல் யாழ். மாவட்ட ரீதியாக மீனவர்களின் போராட்டம் விரிவுபடுத்தப்படுவதுடன் -

யாழ்.செயலகத்தின் முன்னால் மறியற் போராட்டம் செய்யவும் நேரிடும் என்று அவர் சொன்னார்.

இக்கூட்டத்தில் ஐ.தே.கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன், தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் வி.ஜி.தங்கவேல், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், உப தலைவர் ப.ரவீந்திரன், தமிழ்க் காங்கிரஸ் பிரமுகர் எஸ்.செபஸ்தியன், கடற்றொழில், நீரியல்வள யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம். யோசப், வல்வெட்டித்துறை நகரசபை உப தலைவர் சந்திர சேகரம், பிரதேச சபைத் தலைவர் வினசன் கெனடி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறை இறங்குதுறைத் தொழிலாளர்களும் பாரவூர்திச் சங்கத்தினரும் இப்போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

இதனால் பருத்தித்துறை இறங்குதுறைக்கு நேற்று வந்த இந்துருவலி, கோமாரி, பொல்கொட ஆகிய கப்பல்கள் பொருள்கள் இறக்காமல் காங்கேசன்துறைக்குத் திரும்பிச் சென்றன.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், அபிவிருத்தித் தொண்டர்கள் ஆகியோரும் இப்போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

### பதாகைகள்

மறியற் போராட்டத்தில் ஈடுபடட மீனவர்கள் பல்வேறு வாசகங்களைக் கொண்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

நெல்லியடிப் பகுதியில் ஹர்த்தால் ஒழுங்குகள் மேற்கொண்டிருநத சில இளைஞர்களை அங்கு வந்த சீருடையினர் தாக்கியதாகக் கூறப்பட்டது.

(க-4-9-117-118-173-182)

## வடக்கில் நீதியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போடுவதைத் தடுத்து நிறுத்தவோ யாரும் முயற்சிக்க வேண்டாம். அப்படிச் செய்யவும் நாம் விடமாட்டோம்.

✪ ஏதாவது ஒரு தொகுதியில் கலவரம் அல்லது முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்தால், அத்தொகுதியின் வாக்குகள் ரத்துச் செய்யப்படும். தேர்தலுக்கு ஏழு நாள்களுக்குப் பின்பு அங்கு மீண்டும் வாக்கெடுப்பு நடைபெறும். இவ்வாறு நடந்தால் குறிப்பிட்ட மாவட்டத்தினது தேர்தல் முடிவுகள் வெளியாக காலதாமதம் ஆகும். இதனால் நாடாளுமன்றம் கூடும் நாளும் பின்தள்ளப்படும் என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

✪ தேர்தல் கண்காணிப்புக்கு வெளிநாட்டு அவதானிகள் வருவதை நான் பெரிதும் விரும்புவதில்லை. ஏனெனில் அவர்கள் இங்குள் நிலைமையை சரியாகப் புரிந்துகொள்ளக் காலம் போதாது. நாட்டின் பின்தங்கிய கிராமங்களுக்கு இவர்கள் போவதில்லை. இதனால் அவர்களின் அறிக்கைகள் பூரணமானவை எனக் கூற முடியாது.

✪ இம்முறையும் வெளிநாட்டு அவதானிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய நாடுகள் சபை, ஆசியத் தேர்தல் அமைப்பு, இந்தியத் தேர்தல் ஆணையகம் என்பவற்றுக்கு இது தொடர்பாக அழைப்பு விடுத்துள்ளேன்.

✪ பாதுகாப்பற்ற பிரதேசங்கள் குறித்து நான் தற்போதைக்கு எதுவும் கூறமுடியாது. அவை தொடர்பாக மேலும் பரிசீலிக்க வேண்டும்.

ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படுவது உறுதி. இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதி மக்களுக்கு கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்ட உள்ளன. இடம்பெயர்ந்த மக்கள் தம்மைப் பதிவுசெய்து கொள்வதற்கான கால எல்லை 25 ஆம் திகதிவரை பிற்போடப்பட்டுள்ளது.

✪ இதுவரை நடந்த தேர்தல்களை விட இம்முறை பாதுகாப்பும் சட்டமும் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இதுவரை காலமும் வாக்குச்சாவடி பொறுப்பதிகாரியின் அறிக்கை மட்டுமே பெறப்பட்டது. இம்முறை கடமையில் இருக்கும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரியின் அறிக்கையும் பெறப்படும்.

எங்காவது முறைகேடுகள் காணப்பட்டால் அங்கு அதிக கவனம் காட்டப்படும். ஒவ்வொரு சிறிய விடயம் குறித்தும் நான் அவதானமாக இருப்பேன்.

✪ வாக்குச் சீட்டுக்களில் துஷ்பிரயோகம் ஏற்படாமல் இருக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அதுபற்றி நான் இப்போது எதுவும் கூறமுடியாது. தேர்தல் தினத்தன்று அது எல்லோருக்கும் தெரியவரும்.

✪ தேர்தல் நீதியும் நேர்மையாக அமைய - மனட்சாட்சிப்படி மக்கள் வாக்களிக்க - உதவ வேண்டும் என்று சகல அரசியல் கட்சிகளையும் கேட்டுள்ளேன்.

✪ யாழ்.மாவட்டத்தில் காங்கேசன்துறை, சாவகச்சேரி ஆகிய தொகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு வேறு இடங்களில் வாக்களிக்க வசதி செய்து கொடுக்கப்படும்.

✪ செய்தி ஊடகங்கள் தேர்தலைக் குழப்பக் கூடிய வகையில் செய்திகள், கட்டுரைகளை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

✪ அரச அதிகாரிகளை இக்காலகட்டத்தில் இடமாற்றம் செய்ய வேண்டாம் என்று பொது நிர்வாக அமைச்சைக் கேட்டுள்ளேன். அவர்கள் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். அதேபோல் பொலீஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்ய வேண்டாம் என்று பொலீஸ்மா அதிபரைக் கேட்டுள்ளேன்.

✪ தேர்தல் காலத்தில் தேர்தல் பிரசாரப் பணிக்காக அரச, கூட்டுத்தாபன வாகனங்கள் பாவிப்பதைத் தடை செய்துள்ளேன் - என்றார். (உ-3)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
மாவட்ட நிலையில் வரலாறு படைத்தவர்கள்



சு.டினேசாந்
177 புள்ளி
மா.நி. 1



பா.பானுஜன்
168 புள்ளி
மா.நி. 6



ந.திருத்தணிகன்
166 புள்ளி
மா.நி. 9



மூ.நவநீதசர்மா
164 புள்ளி
மா.நி. 11

மேலும் இவர்களை உள்ளடக்கி சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்த 71 மாணவ மணிகளையும், அவர்களைப் பயிற்றுவித்து ஆற்றுப்படுத்திய அதிபர், உபஅதிபர், ஆசிரியச் செல்வங்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதிலே பெருமகிழ்வெய்துகின்றோம்.

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. (C-18829) பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

உ
சிவமயம்

## வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி - திருவருள்மிகு

# ஸ்ரீ வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான

# கும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்திதின

# நவோத்திர சகஸ்ர சங்காபிஷேக பெருவிழா

## பிரதேசசபைத் தலைவரின் ஆசிச் செய்தி

யாழ். குடாப்பகுதியில் மேற்றிசை அமைந்தது வலிகாமம் மேற்கு. இப்பிரதேசத்தில் சைவமும் தமிழும் ஒருங்கே அமைந்தும் இணைந்தும் காணப்படும் பதி, சங்கரத்தை பிட்டியம்பதி. நாவலர் பெருமான் காட்டிய நன்னெறியும் தமிழும் சைவமும் வளர மூல காரணமாக அமைந்த இடமும் இந்த இடமே.

சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் இங்கு அருள் மழை பொழிகின்றாள். இவ்வருள் மழையில் ஊர்மக்கள் மாத்திரமல்லாமல் யாழ். குடாநாட்டு மக்கள் யாபேரும் மூழ்குகின்றார்கள். அவள் அருள் வேண்ட, அத்தாயும் அருளைச் சொரிகின்றாள்.

பத்திரகாளி அம்பாள் நெல் வயல் சூழ்ந்த பகுதியின் நடுவே வீற்றிருப்பதால் இரத உற்சவ காலத்தில் மழைபொழியும் நேரம் சேற்று நிலத்தில் அன்னையின் தேர் அடியாரால் இழுக்கப்படுவது சிலசமயம் இன்னலைத் தருகின்றது. எனவே, தேரோடும் பாதை இனித் தெருவீதியாக அமைய அவள் அருள் பாலித்துள்ளாள். அடியார்ககளின் அன்பும் பக்தியும் அன்னையின் அருளும் ஒன்றுசேர இத்திருப்பணி சிறந்தோங்கும் என்ற நம்பிக்கையோடு அவள் திருவடிகளைச் சிந்தித்து வந்தனை செய்கின்றேன். அவளது அருளாசி என்றுமே எமக்குண்டு.

### பத்திரகாளி

*திருமருவு பரமசங்கர கிருபாகரவரத*
*திரிபுராந்தகப் பகவனைத்*
*திடமனத்துடனன்று வடவனத்தினின்று .*
*சேர்ந்து வாதாடியோடி*
*உருமருவு மண்டல மொடண்டர் பயில்*
*எண்டிசைகள் உயரண்ட ரண்டமுழுதும்*
*உன்னியெழு கோரி மாவீரி*
*சடையன் பாரி உயரி ரீங்காரிசூரி*
*மருமருவு சடிலதரகாளி கங்காளி*
*சர்வாணி மாதங்கி சூலி மதமகிட*
*சங்காரி வீரசிங்காரி நெடுவாரி சூழ்பாரினிலவும்*
*தரமருவு பிட்டிநகர் உறையுமொரு கௌரியே*
*தயவு வைத்தெனை யாழுவாய்*
*சக்தியுத்தமி சித்திர மெத்து வித்தகி நித்திய*
*சக்தி பத்திரகாளியே!*

**திரு. ந. திரிலோகநாதன்,**
*(வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர்,*
*வட்டுக்கோட்டைத் தொகுதி*
*ஈ. பி. டி. பி. அமைப்பாளர்*
*வலி. மேற்கு இந்து ஆலயங்களின்*
*மகா சபையின் போஷகர்,*
*ஈ. பி. டி. பி. வடபிராந்திய*
*இந்து சமய பொறுப்பாளர். )*

### ஊரடங்குச் சட்டம் நீக்கம்

சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய சங்காபிஷேகத்தை முன்னிட்டு இன்று இரவு ஒருமணிவரை ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் மேற்கொண்டிருந்தார்.



## நிகழ்ச்சிகள்

※ காலை 7.00 மணிமுதல் -
சங்கு பூஜை, அபிஷேக ஆராதனைகள்
※ 11.00 மணிக்கு -
வாமண சிவாச்சாரியார்
சிவஸ்ரீ சுப்பிரமணிய சுந்தரராஜக் குருக்கள்
*(வழக்கம்பரை அம்பாள் தேவஸ்தான பிரதம குரு)*
அவர்களை குருவணக்கத்துடன் கௌரவித்தல்.
※ 12.00 மணிக்கு - விசேட பூஜைகள்
※ அன்னதானம்
*(வலிமேற்கு பிரதேச சபைத் தலைவரும் ஈ. பி. டி. பி வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும், இந்து சமய விவகார வடபிராந்திய பொறுப்பாளருமான* திரு. ந. திரிலேகநாதன் *(ஜே. பி. யு. எம்)* அவர்களின் அனுசரணையுடன் அன்னதானம் நடைபெறும். *)*
※ மாலை 5.00 மணி முதல்
மூலஸ்தான வசந்தமண்டப பூஜை.
※ விசேட மேளக்கச்சேரி -
பத்மநாதன் குழுவினர்
வி.கே. கானமூர்த்தி குழுவினர்
சிவகுமார் குழுவினர்.
※ வில்லிசை -
*யாழ்ப்பாணக்கல்லூரி விரிவுரையாளர்*
பொன். அருந்தவநாதனின்
"அம்பிகை வில்லிசைக் குழு" வழங்கும்
"தீர்க்க சுமங்கலி"
வில்லிசை நிகழ்வு இடம்பெறும்.

## இன்பங்கள் நல்கும் தேவி!

பத்திரகாளி நாமங்கொண் டிலங்கி
பக்தர்க்கருளும் தேவி
எத்திசையும் புகழ் பெற்றிலங்கிட
எழிலாயுறையும் தேவி
புத்திபலம் செல்வமெனும் நன்மைகள்
புவியோர்க் கருளும் தேவி
இத்தரணியோர் போற்றி ஏற்றிட
இன்பங்கள் நல்கும் தேவி.

- சங்கரத்தையூர்வாசி.

(C/18822)

## மஹோற்சவக் குருக்களின் ஆசிச் செய்தி

*"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி"* என்ற மாணிக்கவாசகத்தில் உள்ள அருள் என்பது சிவசக்தியேயாம். இச்சிவசக்தியே சிதம்பரத்தில் சிவகாமி என்றும் மதுரையிலே மீனாட்சி என்றும் சங்கரத்தைப் பதியிலே பத்திரகாளி என்றும் பெயர் கொண்டு கருணை பொழிகின்றது.

சங்கரத்தைப் பத்திரகாளி அம்பாளை வழிபடுபவர் மட்டும் நன்கு அறிந்து கொண்டாட எனக்கும் அத்தகைய வாய்ப்பு கிடைத்தது அம்பிகையின் பேரருள் என்றே காண்கின்றேன்.

பத்திரகாளி அம்பாள் வழக்கம்பரையில் பூசை செய்து கொண்டிருக்கும் என்னை திருவிழாவை முன்னிட்டு அழைத்து மகாகும்பாபிஷேகமும் செய்யச் செய்திருப்பது தாயன்பின் காரணம் என்றே கருதுகின்றேன்.

திருவிழாக் காலங்களிலும்சரி மகாகும்பாபிஷேக மண்டலாபிஷேக சந்தர்ப்பங்களிலும்சரி இங்கு பூசை செய்யும் அர்ச்சகர்கள், அறங்காவலர்கள், உபயகாரர்கள், வழிபடுவோர் என அனைவரும் பத்திரகாளி அம்பாளிடத்து கொண்ட தூய பக்தி காரணமாக ஆலய அலுவலகங்களிலும்சரி என்னுடன் சேர்ந்து செயலாற்றும் முறைகளிலும்சரி மிகப் பண்பாகவும் அக்கறையாகவும் செயற்பட்டார்கள். இப்படிச் செயற்பட்டதற்கான உண்மைக் காரணம், கண்கண்ட தெய்வமாக பத்திரகாளியம்பாள் அருள் செய்வதும் தன் பக்தர்கள் வழிதவறும் சந்தர்ப்பங்களில் தடுத்து ஆளும் அம்பிகையின் பெரும் தன்மையுமே என்பதை அறிகின்றேன்.

பத்திரகாளி அம்பாளின் சாந்நித்யம் உணர்ந்து வாழும் அனைவரும் மென்மேலும் அம்பிகையின் அருள்பெற்று எல்லா நலன்களையும் அடைகவென்றும் ஆலயப் பணிகள் திருத்தொண்டுகளில் ஈடுபட்டுத் தம் மானிடப் பிறவியின் பயனை அடைக என்றும் -

ஸ்ரீ வீரபத்திர சுவாமியையும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளையும் நன்கு தியானிக்கின்றேன்.

*வாமண சிவாச்சாரியார்*
**சிவஸ்ரீ சுப்பிரமணிய சுந்தரராஜ குருக்கள்.**

## அன்னையே போற்றி!

அம்பிகை பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருக்கும் அருட் தெய்வம் . இவ்வுலகில் நன்மையும், தீமையும் இணைபிரியாது கலந்தே காணப்படுகின்றன. நன்மைக்கு உந்து சக்தியாகவும் தீமைக்குத் தடையாகவும் இருந்து மனிதனைத் தர்மத்தின் வழி இட்டுச் செல்லும் ஆனந்தசொரூபினி பத்திரகாளி ஆவாள்.

பக்திக்கு முதலிடம் கொடுத்து அருள்பாலிக்கும் திருத்தலம் அன்னையின் திருக்கோயிலாகும். உலக மாதாவின் திருவருளால் தேவி அவள் சந்நிதியில் மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா சிறப்பாக நடைபெறுவதற்கு திரிபுரசுந்தரியைப் பிரார்த்தனை செய்கிறேன்.

*"அவள் இன்றி ஓர் அணுவும் அசையாது"*

*'சொல்லின் செல்வர்'*
**இரா. செல்வவடிவேல்.**

தேர்தலுக்காக

# குண்டரைத் திரட்டுகின்றனர் கொழும்பு அரசியல்வாதிகள் சிலர்

கொழும்பு, ஒக். 24

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் சிலர் எதிர்வரும் தேர்தலில் கள்ளவாக்குப் போடும் நோக்கத்துடன் பாதாள உலகக் கோஷ்டிகளின் ஒத்துழைப்புடன் குண்டர்களைத் திரட்டி வருவதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கொம்பனித்தெரு, வாழைத்தோட்டம், வெல்லம்பிட்டி, கிராண்ட்பாஸ், பொரளை ஆகிய பகுதிகளில் அரசியல்வாதிகளின் நெருங்கிய ஆதரவாளர்கள் இரவு பகலாக குண்டர்களைச் சேர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதிகளிலுள்ள பொலீஸாரும். அரசியல்வாதிகள் அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளதுடன் தமக்கு ஆதரவான பொலீஸாருக்கு விருந்துபசாரங்களையும் நடத்தி வருவதாகத் தெரிய வருகின்றது.

பொதுத் தேர்தலில் போட்டியிட விருக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் பாதாள உலகக் குழுக்களுக்குத் தேவையான ஆயுதங்களையும் வழங்கியுள்ளதுடன் குண்டர்களுக்கு மறைவிடங்களையும் ஒதுக்கிக்கொடுத்து வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இந் நடவடிக்கைகளினால் பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கு முன்னரே பொது மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது.

நேர்மையானதும் நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத்த தேர்தல் திணைக்களமும் பொலீஸ் திணைக்களமும எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளும் நாட்டின் எதிர்கால நலனில் அக்கறையில்லாத அரசியல்வாதிகளை மக்கள் ஆரம்பத்திலேயே புறக்கணிக்கவேண்டும் என்று பொலீஸ் அதிகாரியொருவர் தெரிவித்திருக்கின்றார். (க)

இதேவேளை —

## வீதியின் ஒருபகுதி திருத்தவில்லை

யாழ்ப்பாணம், ஒக். 24

சுன்னாகம் தெற்கு சபாபதிப்பிள்ளை வீதியின் ஒரு பகுதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

இந்த வீதியின் ஒரு பகுதி திருத்தப்பட்டு 2 வருடங்களாகியும் மறுபகுதி திருத்தப்படாமல் இருப்பது குறித்து அப்பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளனர். (ஐ-4)

# தகுதியற்ற தொண்டராசிரியர்களை இடைநிறுத்த அதிபர்களுக்குப் பணிப்பு

அச்சுவேலி, ஒக். 24

தகுதியற்ற தொண்டர் ஆசிரியர்களைச் சேவையில் இருந்து உடனடியாக இடைநிறுத்தி, அவர்களின் முழுமையான விபரங்களை மாகாணக்கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்குமாறு அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது சேவையிலுள்ள தொண்டராசிரியரில் 45வயதுக்கு மேற்பட்டவர்கள், ஜீ.சி.ஈ. சாதாரணம், ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைகளில் உரிய முறையில் சித்தியடையாதவர்கள், 1999 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் ஆகியோரையே உடனடியாகச் சேவையில் இருந்து இடைநிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விசேட பாடங்களானகணிதம், விஞ்ஞானம், தமிழ், நடனம், சித்திரம், விவசாயம், மனையியல் போன்ற பாடங்களைக் கற்பிப்பவர்கள் ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சம்பந்தப்பட்ட பாடத்தில் விசேட சித்தியும், ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சம்பந்தப்பட்ட பாடம் உள்ளடங்கிய மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

ஆங்கில பாடம் கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர் ஜீ.சி.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கில இலக்கியத்தில் திறமைச்சித்தி அல்லது ஆங்கில மொழியில் விசேட சித்தி பெற்றிருக்க வேண்டும்.

இந்தத் தகுதிகள் இல்லாது கடமையாற்றும் தொண்டராசிரியர்களையும் உடனடியாக இடைநிறுத்துமாறும் அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கல்விச் சேவை ஆணைக்குழுவின் தகுதிகாண் ஆசிரியர் நியமனப் பிரமாணங்களின்படி கல்வித்தகைமையை வரையறை செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-11)

## சைவ சமயப் போட்டிகள்

உடுவில் கல்விக்கோட்ட பாடசாலை மாணவர்கள் பங்கு கொள்ளும் சைவசமய தொண்டுபடும் செயன்முறை, திருமுறைப் பண்ணிசை, நீதிச் செய்யுள், மனனமுற்றோதல் போட்டிகள் இம்மாதம் 27 ஆம் திகதியும், 31 ஆம் திகதியும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளன.

27 ஆம் திகதி சனிக்கிழமை தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான மாணவர்களுக்கான சகல போட்டிகளும் நடைபெறும். அத்துடன் தரம் 6 முதல் 13 வரை தொண்டுபடும் செயன்முறைப் போட்டிகளும் நடைபெறும்.

31 ஆம் திகதி புதன்கிழமை தரம் 6 முதல் 13 வரை திருமுறைப் பண்ணிசை, நீதிச் செய்யுள் மனனம், கதாப்பிரசங்கம், புராணபடனம்ஆகிய போட்டிகள் இடம்பெறும்.

பாடசாலைமட்ட போட்டிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று போட்டியாளர்களில் முதலாம் இடத்தைப் பெற்றவர் கோட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர். (ம-152)

# அந்தமாத இறுதிக்குள் இலவச சீருடை விநியோகம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடையை நவம்பர் மாதம் 28 ஆம் திகதி விநியோகிக்குமாறும் இலவச பாடநூல்களை 3 ஆம் தவணை முடிவுக்கு முன்னர் வழங்குமாறும் கல்வி உயர் கல்வி அமைச்சர் சரத் அமுனுகம அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

ஜனவரி மாதம்பாடசாலை ஆரம்பமாகும்போது புதிய ஆடை அணிந்து, புதிய புத்தகங்களுடன் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்களேயானால் அது கல்வி அமைச்சுக்கு ஒரு சாதனையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வடபகுதிக்கான பாடநூல்கள் நவம்பர் மாதம் 30 ஆம் திகதியளவில் கப்பல் மூலம் அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அனுசரணையுடன் அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாடநூல்கள் உரிய நேரத்தில் கிடைக்காவிடின் கல்வி அமைச்சுக்கு முறையிடுமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (ம-9)

## மலசலக் கழிவுகள் போடப்படுவதால் மக்கள் சிரமம்

கோப்பாய், ஒக். 24

கோப்பாய்த் தரவைப் பகுதிகளில் மலசலக் கழிவுகள் கொட்டப்படுவதாகப் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இதனால் இப்பகுதியை அண்டிய பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதுடன் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இப்பகுதிகளில் மேய்ச்சலுக்குச் செல்லும் கால்நடைகளுக்கும் தொற்றுக்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (க-72)

# ஆஸ்பத்திரி முன்பாக வீதியில் வாகனங்களை நிறுத்தாதீர்

## பொலீஸ்போக்குவரத்துஅதிகாரிஅறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ். போதனா வைத்திய சாலை முன்பாக வீதியின் நடுப்பகுதியில் வாகனங்கள் நிறுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். பொலீஸ் நிலையப் போக்குவரத்துப் பொறுப்பதிகாரி உடுவெல்ல பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

வாகனங்கள் தரிப்பதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டும் அவற்றை நிறுத்துவதன் மூலம் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு ஒத்துழைக்குமாறும் —

மீறுவோர் மீது பொலீஸார் சட்ட நடவடிக்கை எடுக்க ஆயத்தமாகி வருவதாகவும் —

அவர் மேலும் கூறினார். (ம-9)

## வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக். 24

கைதடி தெற்கு மின்னொளி கல்விக் கழகத்தின் வாணி விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்விக் கழக இயக்குநர் ப. விஜயகுமாரன் தலைமையில் கழக முன்றிலில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கைதடி மேற்கு கிராம அலுவலர் சு. செல்வராசா, கைதடி தெற்கு கிராம அலுவலர் வி. சிவசுப்பிரமணியம், கைதடி தெற்கு சனசமூக நிலையத் தலைவர் வே. செல்வராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்

இந்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தரத்துக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இந்த நிகழ்வில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-10)

★ ★ ★

வலிகாமம் தெற்கு, ஒக். 24

வலிகாமம் வலயக் கல்வி அலுவலக நலன்புரிக் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் வாணி விழா நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் எஸ். சிவமகாலிங்கம் 'சர்வம் சக்திமயம்' என்ற பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

திருமதி வி. நாகேஸ்வரனின் பா ஓதலும் பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தியின் சக்தி மகத்துவம் பற்றிய சங்கீத கதாப்பிரசங்கமும் இடம்பெறும்.

சி. செல்லையா தலைமையில் நடைபெற உள்ள இவ் விழாவில் சகலகலாவல்லி மாலை விருத்தப்பா ஓதல் போட்டியில் வெற்றி பெற்றோருக்கும், தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் வெற்றிபெற்ற விழிப்புலனற்ற மாணவனுக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

(ம-152)


## சைவ வித்தியா விருத்திச் சங்கம் விசேட பொதுக்கூட்டம்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் (2001-11-11) ஞாயிறு பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

சங்க யாப்பு பொதுச் சபையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்படும்.

நிகழ்ச்சி நிரலும், யாப்புநகலும் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

சோ. பத்மநாதன்
செயலாளர்.

(சி/18821)



## 74 ஆவது ஜெயந்தி தின விழா

24 - 10 - 2001



ஸ்ரீ முருகன் ஆத்மீக
அருள் மார்க்கண்டு சுவாமிகள்

மானிப்பாய் ஸ்ரீ முருகன் அருள் நிலையத்தில் இன்று (24 - 10 - 2001) புதன்கிழமை சுவாமிகளின் 74 ஆவது ஜெயந்தி தின விழாவை அவரது அருளும், ஆசியும் பெற்றிருக்கும் முருகன் அடியார்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள்.

முருகன் அடியார்கள்.

மானிப்பாய். (93726)



## தர உள்ளீட்டுப் பொருள்களுக்கான கூறுவிலை கோரல்

வலிகாமக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு வழங்குவதற்காக கருவி உபகரணங்களுக்கு கூறுவிலை கோரப்படுகிறது. தேவையான பொருள்களின் விபரப்பட்டியலை26-10-2001ஆம் திகதி முதல் வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று 01-11-2001 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கோரப்படுகிறீர்கள்.

வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
வலிகாமம்.

(சி/18825



## கண்ணீர் அஞ்சலி

### அமரர் நாகமுத்து சின்னத்துரை

(உபதலைவர், சாவகச்சேரி பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்)

எமது சங்கத்தின் உப தலைவரான கெருடாவில் சாவகச்சேரியைச் சேர்ந்த நாகமுத்து சின்னத்துரை அவர்கள் 21-10-2001 இல் அகாலமரணமானார் என்ற செய்தி கேட்டு ஆறாத்துயர் கொண்டோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.

சாவகச்சேரி பனை, தென்னைவள,
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
அச்சுவேலி. (93767)

## உதயன்

### குடும்பக் கட்டமைப்பை பேண உதவும் மதங்கள்

"யாழ். குடாநாட்டில் குடும்பப் பிரிவுகள், சண்டைகள், சச்சரவுகள் அதிகரித்து வருகின்றன. நல்ல ஆரோக்கியமான, சமுதாயம் ஒன்று உருவாகுவதற்கு இத்தகைய சீர்குலைவுகள் தடையாக அமைந்துவிடும்."

- இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கின்றார் யாழ்.ஆயர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம்.

குடும்பப் பிரார்த்தனை அல்லது செபம் இத்தகைய சிக்கல்க்ளில் இருந்து குடும்பங்கள் விடுபட ஒரு வழியாகும் என்றும் அவர் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

ஒவ்வொரு தனித்தனிநபர்களும் குடும்பத்தின் அங்கத்தவர்களாவர். குடும்பங்கள் ஒவ்வொன்றும் சமூகத்தின் சிறிய அலகுகள் ஆகும். குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள், சச்சரவுகள் சமூகததைச் சீர்குலைக்கும். எனவே சமூகத்தைச் செப்பனிடுவதற்கு, முதலில் குடும்பங்களையும், அக்குடும்பங்களை ஆக்குகின்ற தனிநபர்களையும் நாம் செவ்வையான பாதையில் வழிநடத்த வேண்டும்.

அந்த முயற்சியில் முக்கிய பங்காற்றும் கடமை மதங்களுக்கு இருக்கின்றது. அதனையே யாழ். ஆயர் வலியுறுத்தியிருக்கின்றார்.

குடும்பங்களில் முரண்பாடுகள், பிரச்சினைகள் வளர்ந்து குடும்பங்கள் சிதறுகின்றன. அது சமூகச் சீர்கேட்டுக்கு வழிசெய்கின்றது.

மேலைத்தேய நாடுகளில் தனிமனித வாழ்வுக்கு - தனி மனித சுதந்திரத்துக்கு - முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. சமுதாயத்தில் தனி ஒருவர் என்ற நிலையில் அங்கு சிந்தனை உள்ளது. பிரச்சினைகள், சிக்கல்கள், நெருக்கடிகளைத் தனியொருவராக எதிர்கொள்ளும் போக்கே அங்கு உள்ளது. குடும்பத்தின் கூட்டுணர்வும் பொறுப்பும் அங்கு மிக மிகக் குறைவே.

ஆனால் நமது நாடு உட்பட கீழைத்தேசத்தில் இந்த நிலைமை வேறுவிதமாக உள்ளது. பிரச்சினைகள், உயர்வு - தாழ்வுகள், இன்ப-துன்பங்கள், வசதி - வாய்ப்புகள் எல்லாமே குடும்பமாகவே எதிர்கொள்ளப்படுகின்றன; பகிரப்படுகின்றன. குடும்பத்தில் ஒவ்வொரு அங்கத்தவனும் தன்தன் பங்கைச் சரிவர ஆற்றும்போது குடும்ப மேம்பாடு உயர்கின்றது.

இந்த ஒவ்வொரு அங்கத்தவரிடையேயுமான புரிந்துணர்வை - ஒட்டுறவை - பரஸ்பர ஈடுபாட்டை - நெருக்கத்தை - பேணுவதிலும் கட்டி வளர்ப்பதிலும் சமய வழிபாடுகளும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து கூட்டுப் பஜனை அல்லது செபத்தில் ஈடுபடுவது ஒரு நல்ல நடவடிக்கையாகும். குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்துவனையும் ஆத்மீக ரீதியில் இது நல்வழிப்படுத்துவதுடன் குடும்ப ரீதியான ஓர் ஒற்றுமைச் செயற்பாட்டுக்கும் வித்திடுகிறது.

எங்களுக்கு முந்திய தலைமுறை, குடும்பம் என்ற கட்டுக்கோப்புக்கு அப்பால் கூட்டுக் குடும்பம் என்ற கட்டமைப்பில் வாழ்ந்தது. கூட்டுக் குடும்பங்கள் சமூகத்தின் தனி அலகாக இருந்தன. அந்நிலை இன்று பெருமளவு மாறிவிட்டது. கூட்டுக் குடும்பமாக வாழும் நிலை மாறி - கூட்டுக் குடும்பங்கள் சிதறி - தனித்தனிக் குடும்பங்களாக வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது மேலும் சிதறி, குடும்ப அங்கத்தவர்கள் தனித்தனி நலன்பேணும் தனிநபர்களாக வாழும் - மேலைத் தேசப் பாணியிலான - இறுக்கமான குடும்பப் பிணைப்பு இல்லாத - ஒரு நிலை உருவாகிவிடும் என்ற அச்சமே நமது சமூகவியலாளர்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

இந்தப் பிரச்சினைகளிலிருந்து விடுபடவும் - இறுக்கமான குடும்பப் பிணைப்புக்கு வழிகாட்டவும் - மத நம்பிக்கைகள், ஆசாரங்கள், வழிபாடுகள் நமக்கு உதவுகின்றன.

குடும்ப அங்கத்தவர்கள் தமது பெற்றோரை அல்லது மூத்தோரை மதிக்கவும் தமது இளையோரை அல்லது பிள்ளைகளை அரவணைக்கவும் தூண்டும் வழிபாட்டு முறைகளை நமது மதங்கள் கொண்டிருக்கின்றன. நமது வழிபாட்டு முறைகள் சீரான குடும்ப வாழ்வை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை.

அவற்றைப் பின்பற்றுவதன் மூலமே நமது குடும்பக் கட்டமைப்பை நாம் நன்கு பேணமுடியும்.

# சிங்கப்பூரிலிருந்து திரும்பியவர் கொழும்புச் சிறையில் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.24

சிங்கப்பூர் சென்று தொழில் புரிந்துவிட்டுக் கொழும்புக்குத் திரும்பிய சிறுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கொழும்புச் சிறைச்சாலையில் இருப்பது தெரியவந்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி என்.ஜீவேஸ்வரா தெரிவித்துள்ளார்.

சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த ஐயங்கன் தாசன் (வயது 27) என்ற இளைஞரே இவ்வாறு சிறைச்சாலையில் இருப்பவராவர்.

கொழும்பு வந்த மேற்படி இளைஞர் பம்பலப்பிட்டியில் உள்ள சாந்தி லொட்ஜில் தங்கியிருந்த சமயம் கடந்த ஓகஸ்ட் மாதம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாகக் குறிப்பிட்ட லொட்ஜின் மனேஜர் சிறுப்பிட்டியில் உள்ள இளைஞரின் சகோதரனான ஐயங்கன் இரட்ணசாமி என்பவருக்குக் கடிதமூலம் அறிவித்திருந்தார்.

இதனை அடுத்துக் குறிப்பிட்ட கடிதம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துடன் தொடர்புகொண்ட மேற்படி இளைஞரின் சகோதரன் தனது தம்பியின் தற்போதைய நிலை பற்றித் தகவல்பெற்றுத் தருமாறும் கேட்டிருந்தார்.

இதுவிடயம் தொடர்பாகக் கொழும்பில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்துடன் தொடர்புகொண்டு கேட்டபொழுது கடந்த ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி கல்கிசைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட மேற்படி இளைஞன் தற்பொழுது சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று அவர்களால் தெரிவிக்கப்பட்டதாக என்.ஜீவேஸ்வரா மேலும் தெரிவித்தார்.

(ம-10-ரி)

# நிவாரணப் பொருள்கள் உரியவரை சென்றடைவதை உறுதிப்படுத்தவும்

## கிளை முகாமையாளர்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக்.24

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இடம்பெயர்ந்த மக்களுக்கு விநியோகிக்கப்படும் நிவாரணப் பொருள்களை அந்தந்தக் குடும்ப உறுப்பினர்களே பெற்றுக்கொள்ள வேண்டும். இதனை சங்கக்கிளை முகாமையாளர்கள் உறுதி செய்வதுடன் நிவாரணம் நேரகாலத்துடன் உரியவர்களுக்கு வழங்கப்படுவதையும் அவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் -

ஒவ்வொருமாதமும் 5ஆம் திகதிக்குப் பின்னர் நிவாரண விநியோகத்தை நிறுத்துவதன் மூலம் மோசடிகள் இடம் பெறுவதைத் தவிர்க்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ம-9)

# அனைத்து நீதிமன்றங்களுக்கும் பொலீஸ் பாதுகாப்பு வழங்க முடிவு

## நீதிச் சேவை ஆணைக்குழு நடவடிக்கை

நாட்டில் உள்ள சகல நீதிமன்றங்களுக்கும் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஏ.டபிள்யூ.அப்துஸ் ஸலாம் நீதிமன்றங்களின் பதிவாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பான கடிதங்களை அவர் ஏற்கனவே பதிவாளர்களுக்கு அனுப்பியுள்ளார்.

தற்போது நீதிமன்றங்களில் ஆயுதங்கள் ஏதுமற்ற இரவுக் காவலர்களே பாதுகாப்புப் பணிகளைச் செய்கின்றனர். ஆனால், தற்போதைய சூழலில் இவர்களால் பாதுகாப்புப் பணிகளைச் செய்யமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையில் நடைபெற்ற நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் விசேட கூட்டத்தில் நீதிமன்றங்களுக்குப் பொலீஸ் பாதுகாப்பு வழங்குவதன் அவசியம் பற்றி வலியுறுத்தப்பட்டது. அதனையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, மத்துகம ஆகிய நீதிமன்றங்களில் வழக்குக் கோவைகள் உள்ள பகுதிகள் இனம் தெரியாதவர்களால் தீக்கிரையாக்கப்பட்டமை தெரிந்ததே. (ம)

## தரம் 9 ஆண்டிறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.24

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சினால் கடந்த ஆண்டு தொடக்கம் நடத்தப்பட்டுவருகின்ற தரம் 9 மாணவர்களுக்கான ஆண்டிறுதிப்பரீட்சை நவம்பர் மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் மாகாணக் கல்வியமைச்சினால் தயாரிக்கப்பட்டு, யாழ்.மாவட்டப் பரீட்சைக் குழுவினால் பரீட்சை நடத்தப்படவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சையில் சித்தியடைகின்ற மாணவர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் சான்றிதழ் வழங்கப்படும். யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் நவம்பர் மாதம் 8ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரையும் இப்பரீட்சை நடைபெறவுள்ளது. (ம-10)

## நாளை

ஐப்பசி 08
வியாழக்கிழமை
திதி : நவமி
பின்னிரவு 1.45 வரை.
நட்சத்திரம் : திருவோணம்
முன்னிரவு 7.51 வரை.
சரஸ்வதி பூஜை - மஹாநவமி
கேதாரகௌரி நோன்பு ஆரம்பம்
சுபநேரம் : 7.32 - 9.02
ராகுகாலம் : 1.32 - 3.02
(பழைய நேரப்படி)

## வேதாகம கற்கை வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஒக்.24

பொதுநிலையினருக்கான வேதாகம புதிய ஏற்பாட்டுக் கற்கை நெறிக்கான இரண்டாம் கட்ட வகுப்புகள் எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை காலை 9.15 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடு நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இக்கற்கைநெறிக்குப் புதிதாகச் சேர விரும்பும் மாணவர்களைப் பங்குத் தந்தையுடன் தொடர்புகொண்டு விண்ணப்பிக்குமாறு பொது நிலையினர் ஆணைக்குழுத் தலைவர் கேட்டுள்ளார். (ம-9)

## உதயவாக்கு

முட்டாளுக்கு 'மௌனமாக இரு' என்பதை விட உயர்ந்த உபதேசம் வேறு எதுவும் இல்லை. அதன் நன்மையை அறிந்துவிட்டால், அவன் முட்டாளாக இருக்கமாட்டான்.

## நாட்டு நடப்பு

### இதுவுமோர் காதல்

பையனும் தினமும் கண்டு
பல்தனை இழித்து நிற்பான்
மையலும் கொண்டு மங்கை
மனதினைப் பறி கொடுத்தாள்
கைதனைப் பிடிக்க முன்பு
கதைத்திட அருகில் சென்றான்
பையிலே குளிகை அள்ளி
பக்குவமாய் வாயில் போட்டு
கையிலே நாலைத் தந்து
'கண்மணி! போடு' என்றான்
'ஐயகோ! இவனுக்கு மனநோயென்று'
அலறியே எடுத்தாள் ஓட்டம்

*- விகடகவி.*

# நுளம்பு வலைகளுக்கு மருந்து தோய்ப்பதற்குப் பலர் பின்னடிப்பு

## சுகாதாரப் பகுதியினர் கவலை

வலிகாமம் தெற்கு,ஒக்.24

நுளம்பு வலைகளுக்கு 'பெமத்திரன்' மருந்து தோய்த்து வழங்குவதற்கான நடவடிக்கைகளைத் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் மேற்கொண்டிருந்த போதிலும் கடந்த காலங்களில் நுளம்பு வலைகள் பெற்றிருந்த பலர் 'பெமத்திரன்' மருந்து தோய்த்துக்கொள்வதில் அதிக அக்கறை காட்டவில்லை எனச் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் 'யூனிசெவ்' நிறுவனத்தின் உதவியுடன் தெல்லிப்பழை சுகாதாரப் பகுதியில் ஆயிரத்துக்கும் அதிகமான நுளம்புவலைகள் வழங்கப்பட்டிருந்தன.

தற்போது நுளம்பு வலைகளுக்கு பெமத்திரன் மருந்து தோய்த்துத் தர அழைப்புவிட்டபோதிலும் சுமார் முன்னூறு வலைகளே இதற்கென சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்துச் சுகாதாரப் பகுதியினர் மருந்து தோய்க்கும் நடவடிக்கையை விரிவுபடுத்தி, கிராமம் தோறும் சென்று 'பெமத்திரன்' தோய்த்து வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் பின்வரும் இடங்களில் வைத்துக் குறிப்பிட்ட திகதிகளில் 'பெமத்திரன்' தோய்த்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★ 25.10.2001 வியாழன்: கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையம்.

★ 26.10.2001 வெள்ளி: அளவெட்டி கிழக்கு கும்பலை சனசமூக நிலையம்.

★ 27.10.2001 சனி: இணுவில் மத்திய மருந்தகம்.

★ 29.10.2001 திங்கள்: அளவெட்டி மத்திய மருந்தகம்.

★ 01.11.2001 வியாழன்: ஆரம்ப சுகாதாரக் கணிப்பு நிலையம் - உடுவில்.

★ 02.11.2001 வெள்ளி: மயிலங்காடு சனசமூக நிலையம். (ம-152)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.2

அடுத்தமாதம் மகரகமவில் நடைபெறவுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசியமட்ட கலசாரப் போட்டிகளில் பங்குபற்றுவதற்குத் தகுதி பெற்றுள்ள இளைஞர், யுவதிகளுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தேசிய இளைஞர் பேரவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் போட்டியாளர்களுக்கான பயண ஏற்பாடுகள் மற்றும் ஏனைய ஒழுங்குகள் குறித்து கலந்துரையாடப்படவிருப்பதால் போட்டியில் பங்குபற்றுவதற்குத் தகுதி பெற்ற அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-4)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.24

யாழ்கல்வி வலயத்தின் முதன்மை ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தலைமையில் வலயக்கல்விப் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்டிறுதிப் பரீட்சை தொடர்பாக ஆராயப்படவுள்ள இக்கலந்துரையாடலில் சகல முதன்மை ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



ஓடி விளையாடும் பிஞ்சுகளை
தன்னந்தனியே விட்டுச் செல்லாதீர்!
வேலி ஓரம், கிணற்றடி மற்றும்
மரத்தடியில் கிடக்கும் மிதிவெடிகள்
அவர்களுக்கு எமனாய் ஆகிவிடும்.

# முஸ்லிம் காங்கிரஸும் ஐ.தே.கவும் விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஐ.தே.கட்சிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையில் விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் ஒன்று மீண்டும் அமைக்கப்படுவதற்கு முஸ்லிம் காங்கிரஸே காரணமாகத் திகழ்கின்றது என்பதை ஐதேகட்சியின் தலைமைப்பீடம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இதனால் எம்முடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வதற்கு ஐ.தே.க.முன் வந்துள்ளது.

இது தொடர்பாக எமது கட்சியின் மத்தியகுழு ஒன்றுகூடி ஆராய்ந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு சம்மதிப்பது எனவும் முடிவு தெரிவித்துள்ளது.

ஒரு சில மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ் ஏனைய மாவட்டங்களில் ஐ.தே. கட்சியுடன் இணைந்தே போட்டியிடும்.

- இவ்வாறு ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (ம-4)

# வீரவன்ஸவின் வங்கிக் கணக்கு குறித்து ஆதாரங்கள் உண்டு என்கிறது 'சண்டேலீடர்'

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவின் இரகசிய வங்கிக் கணக்குத் தொடர்பான சகல ஆதாரங்களும் தன்னிடம் இருப்பதாக 'சண்டேலீடர்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த வங்கிக் கணக்கு தொடர்பான ஆதாரங்களை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்போவதாகவும் -

இதற்கு சாட்சிகளாக வங்கி அதிகாரிகள் சிலரை அழைக்கப்போவதாகவும் - தெரிவித்துள்ள 'சண்டேலீடர்' இந்த விவகாரம் சம்பந்தமாக விமல் வீரவன்ஸ நீதிமன்றம் செல்லத் தயாரா எனவும் கேள்வி எழுப்பியுள்ளது. (ஒ-4)

## பாதமலர் பணிந்து பாராட்டுகின்றோம்



அருளொளி வீசும் அற்புத ஞானி அருட்கவி

**சீ.விநாசித்தம்பி ஐயா**

அவர்களுக்கு

யாழ்.பல்கலைக்கழகத்தினால் கௌரவ விருதாக முதுகலைமாணிப் பட்டம் வழங்கப்பட்டமையையிட்டு, ஐயா அவர்களைப் பாதமலர் பணிந்து உளமாரப் பாராட்டி அவர்தம் அருளாசிகளை வேண்டி நிற்கின்றேன்.

*ஜெற் மோட்டோர்ஸ் வீதி,*
*மயிலணி, சுன்னாகம்.* (93752)

அன்பன் அருளமுதச்சொல்வாரி
சிவத்திரு. வ.குமாரசாமிஐயர்
*(காங்கேசன்துறை)*

## இதய அஞ்சலி



எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி, புவியியற் பேராசிரியர்

**செ.பாலச்சந்திரன்**

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பித்துக் கொள்வதுடன், அமரரின் ஆத்மாசாந்தி பெறவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அத்துடன் அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம். (93750)
துறைத் தலைவர், விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்

திரு.ஆ.ஆனந்தமூர்த்தி

அவர்களின் அன்புத் தந்தையார்

**கதிர்காமு ஆறுமுகம்** அவர்கள்

22.10.2001இல் காலமானதையிட்டு கண்ணீர் அஞ்சலி சமர்ப்பித்து அவரது குடும்பத்தாருடன் சேர்ந்து நாமும் துயரில் பங்குகொள்கிறோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரி கூ.சங்கம்,
யாழ்.போதனா வைத்தியசாலை.
(93748)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 ☆ 03 ☆ 1921

மறைவு 04 ☆ 11 ☆ 2000

**அமரர் செல்லையா கார்த்திகேசுப்பத்தா**

திதி:24-10-2001 அட்டமி புதன்கிழமை

அன்[பு]க்கோர் இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
[பா]சத்துடன் திகழ்ந்த ஐயாவே!
அன்[னை] ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை அருளால் உங்கள்
[ஆத்]மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சா[ந்]தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*[illegible]*

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(93699)

பலமுறை, பல இடங்களில் முறையிட்டும்

# மதுபான நிலையத்தை மூடுவதற்கு இதுவரை நடவடிக்கை இல்லை

## மல்லாகம் சந்திப் பகுதி மக்கள் விசனம்

வலி.வடக்கு,ஒக்.24

மல்லாகம் சந்திக்கு அண்மையில் இயங்கிவரும் மதுபான விற்பனை நிலையத்தை மூடுவதற்கு நடவடிக்கையெடுக்கும்படி சம்பந்தப்பட்டவர்களிடம் பல தடவைகள் முறையிடப்பட்டும் இது குறித்து அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதிருப்பது குறித்து அப்பகுதி மக்கள் கடும் விசனமடைந்துள்ளனர்.

இந்த மதுபான விற்பனை நிலையத்தை மூடிவிடுமாறு அரச அதிபர், பிரதேச செயலர், பிரதேசசபைத் தலைவர் ஆகியோருக்கும் மதுவரித் திணைக்களம், பொலிஸ் நிலையம், இராணுவ முகாம் போன்றவற்றிற்கும் அப்பகுதி மக்கள் முறைப்பாடு செய்துள்ள போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

இம்மதுபான விற்பனை நிலையத்திற்கு வருகை தரும் சிலர் மின்சாரம் துண்டிக்கப்படும் வேளைகளில் அடாவடித்தனங்களில் ஈடுபடுவதாகவும் -

இதனால் அவ்வழியால் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் - அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

சீருடையினரும் இம்மதுபானச் சாலையை உபயோகிப்பதாகக் கூறப்படுகின்றது. (ம-ரி-86)

## வாக்காளராக பதியுமாறு அறிவுறுத்து

வடமராட்சி கிழக்கு,ஒக்.24

வடமராட்சி கிழக்கில் கடந்த யூன் மாதம் 31ஆம் திகதி 18 வயதினைப் பூர்த்திசெய்த அனைவரும் தம்மை வாக்காளராகப் பதிவு செய்துகொள்ளுமாறு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை வட்டாரம் கோரியுள்ளது.

சுண்டிக்குளம் தொடக்கம் அம்பன கிழக்கு வரை இடம்பெயர்ந்துள்ளவர்கள் தத்தமது நிரந்தர வதிவிட கிராம அலுவலர்களை இவ்விடயம் தொடர்பாகச் சந்திக்கும்படியும் கோரப்பட்டுள்ளது. (ம-182)

## ஞாயிறுதோறும் இலவச மருத்துவ முகாம்

வடமராட்சி கிழக்கு,ஒக்.24

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் கடந்தவாரம் முதல் பிரதி ஞாயிறுதோறும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெற்றுவருகிறது.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன் நடத்தப்பட்டுவரும் இச்சிகிச்சை முகாமில் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை, உதவி வைத்திய அதிகாரி டாக்டர் வி.யோகேஸ்வரதேவர் ஆகியோர் சிகிச்சை அளித்துவருகின்றனர்.

சிகிச்சையின்போது நோயாளர்களுக்குத் தேவையான மருந்து வகைகள் சந்நிதியான் ஆச்சிரமத்தாலேயே இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-173)

## மலசலகூடம் அமைக்க 'யுனிசெவ்' நிதி உதவி

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கொக்குவில் மேற்குப் பகுதியில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 20 பயனாளிகளுக்கு மலசலகூடம் அமைக்கவென 'யுனிசெவ்' நிறுவனம் நிதி உதவியினை வழங்கவுள்ளது.-

இந்த 20 பயனாளிகளுக்கும் தலா 15ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் இந்நிதி வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான நிதிக் கொடுப்பனவுகள் விரைவில் வழங்கபடும் எனவும் -

புதிய மலசல கூடங்களை அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் -

நல்லூர் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார். (ம-180)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா,
வாதநோய்கள், வலிப்புநோய்,
பீனிசம், தலையிடி,
தலை - கால் அவியல்,
சரும நோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக் கசிவு, கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு, மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபலமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்.
(91621)

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459


## வாசகர் திருமுகம்

### விசர்நாய்க்கடிப் பிரச்சினைக்கு ஒருங்கிணைந்த திட்டம் அவசியம்

விசர்நாய்க்கடி பற்றி அண்மைக் காலத்தில் பத்திரிகையில் வெளியாகும் செய்திகள் மிகவும் கவலையளிப்பனவாக உள்ளன. கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கைகளும் பரவலாக நடந்துகொண்டிருந்தாலும் விசர்நாய்க்கடியைக் கட்டுப்படுத்துவதற்கு இந்நடவடிக்கைகள் போதுமானவையாக காணப்படவில்லை.

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று வரையப்பட்டு சகல தரப்பினரும் (அதாவது அலுவலர்கள், பொதுமக்கள், பொது நிறுவனங்கள் போன்றவை) பங்கெடுத்து குடாநாடு தழுவிய ரீதியிலேயோ அன்றி ஒரு குறிப்பிட்ட பகுதி தழுவிய ரீதியிலேயோ ஒரு விழிப்புணர்ச்சி கொண்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அப்படிச் செய்வதில் ஓரளவிற்கு பயனடையலாம் என்பது என் கருத்து.

சீனாவில் எலிகள், வெட்டுக்கிளிகள் போன்றவற்றை அழிக்க மக்கள் எல்லோரும் பங்கு பற்றும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதாகச் சில பயணக் கட்டுரைகள் மூலம் அறிந்திருக்கின்றோம். நாமும் நமக்கேற்ற வகையில் ஒரு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்திப் பார்த்தால் என்ன?

*கொக்குவில்* **வை.சந்திரபாலன்.**

### கனடா 'மாப்பிள்ளைகள்'

கனடாவில் கைது செய்யப்பட்ட நாற்பது பேரில் மூவருடைய படங்களையும் பெயர்களையும் வெளியிட்டீர்கள். மிகுதி 37 பேருடைய படங்களையும் பெயர்களையும் வெளியிட்டால் யாழ்.சமுதாயத்துக்கு நீங்கள் செய்யும் பேருதவியாக இருக்கும். பெண்களைப் பெற்றவர்கள் இப்படங்களைப் பாதுகாத்து வைத்து கனடா மாப்பிள்ளைக்கு தம் பெண்களை அனுப்பும் போது அங்கு போய் மறியலிலிருந்து வந்தவனுக்கு தாலிகட்டுவதை தவிர்த்துக்கொள்ளலாம்.

மேலும் - 21-10-2001ஆம் திகதிய உதயனின் ஆசிரியர் தலையங்கத்தில் உதயன் ஆசிரியர் கூறிய நீதி நியாயங்கள் எல்லாம் சமூகத்தின் இந்த சாக்கடைகளின் மரமண்டைகளுக்குள் துளைபோட்டு ஏற்றினாலும் ஏறுமா என்பது சந்தேகமே. இவர்களைத் திருத்துவதற்குத் தேவையானது மரபணு வைத்தியம் அல்லது புலி வைத்தியம். இந்த சாக்கடைகளின் எச்சசொச்சங்கள் இன்னும் இங்கு இருக்கின்றன. இதுகளும் இங்கிருந்து கலைந்துவிட்டால் நாம் நிம்மதியாக இருக்கலாம். ஆனால், பாவம் கனடா?

*சுன்னாகம்.* **மதன்.**

### ஆசிரியர் நலன் பேணுவார்களா?

இன்றைய காலங்களில் கடும் வேலைப் பளுக்கள் மத்தியில் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது கடமையைச் செய்து வருகின்றனர்.

கணிப்பீடு, பாடமேம்பாடு, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் இணைந்து தமது சேவையை மாணவ உலகிற்கு வழங்கி வருகின்றனர்.

ஆசிரியர்கள் சிறப்பான கற்பித்தலில் ஈடுபடவேண்டின் அவர்கள் தமது அறிவைத் தொடர்ந்தும் பெருக்கிக்கொள்ளவேண்டும். தமது அறிவை மேம்படுத்தும் நோக்குடன் அநேகமான ஆசிரியர்கள் பல்கலைக்கழக உயர்கல்வியை வெளிவாரியாகப் பெற்றுக்கொள்ள வேண்டி வார இறுதி நாள்களில் தனியார் கல்வி நிலையங்களில் பெரும்தொகைப் பணத்தைச் செலவிட்டு கல்வி கற்கின்றனர்.

கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு இவை நன்கு தெரியும். ஆசிரியர்கள் தமது கல்வி அறிவை மேம்படுத்திக்கொள்ள வசதிகள் செய்து கொடுப்பது கல்வித் திணைக்களத்தின் கடமையாக இருந்த போதிலும் ஆசிரியர்கள் தாமாகவே பெற்றுக்கொள்ளும் அறிவுக்கு இடையூறு இல்லாமலாவது இருக்கலாம் அல்லவா?

கல்வித் திணைக்கள அதிகாரிகள் சேவைக் காலச் செயலமர்வுகளை வார இறுதி நாள்களில் நடத்துவதன் மூலம் ஆசிரியர்களின் உயர்கல்வி பெறும் வாய்ப்புக்கு இடையூறு விளைவிக்கின்றனர். வார இறுதி நாள்களில் - ஞாயிறு தினத்தில் கூட - சேவைக்காலச் செயலமர்வுகளை நடத்துவது எந்த வகையில் பொருந்தும்? ஆசிரியர்கள் தமது சொந்த அலுவல்களையோ, ஓய்வுகளையோ கூட இத்தினங்களில்தானே மேற்கொள்ளவேண்டும்?

சேவைக்காலச் செயலமர்வுகளை பாடசாலை விடுமுறை நாள்களில் (VACATION DAYS) அதிகாரிகள் நடத்தியிருக்கலாம். இக்காலத்தில் செயலமர்வுகளை நடத்த முடியாமைக்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும், கல்வித் திணைக்கள அதிகாரிகள் பலரும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்டமையே உண்மையான காரணமாகும்.

செயலமர்வுகளை எப்போது நடத்தினாலும் அதற்கான கொடுப்பனவுகளை அந்த அதிகாரிகள் பெற்றுக்கொள்வது உறுதி. தமது வருமானங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஆசிரியர்களின் கல்வி மேம்பாட்டுக்கு தடைபோடலாமா?

எனவே கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆசிரியர்களின் அறிவு மேம்பாடு கருதி எதிர்வரும் காலங்களிலாவது செயலமர்வுகளை வார இறுதி நாள்களில் நடத்துவதைத் தவிர்ப்பார்களா? இதன் மூலம் ஆசிரியர்கள் தம் உயர்கல்வியைப் பெற்றுக்கொள்ள உதவுவார்களா?

ஆசிரியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சங்கங்கள் இதுவிடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஆசிரியர்களின் நலன் காப்பார்களா?

ஆசிரிய சங்கங்களுக்கும் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும் இது சமர்ப்பணம்.

*உடுவில்.* **ராஜா.**

### தேர்தலில் பெரும்பான்மைப் பலத்தை மக்கள் அளித்தால்

# எனது பதவிக் காலத்துக்குள்ளேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன்

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.24

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பொ.ஐ.முன்னணிக்குப் பொதுமக்கள் பெரும்பான்மைப் பலத்தை அளிப்பார்களானால் எனது பதவிக் காலம் முடிவதற்கு முன்னரே நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார். மொனராகலை, அம்பாந்தோட்டை, புத்தளம், கம்பஹா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பொ.ஐ.முன்னணியின் அமைப்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களுடனான சந்திப்பில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரிவினைவாதத்தை முறியடித்து நாட்டைக் காப்பாற்றும் போராட்டமாகவே இந்தப் பொதுத் தேர்தலைச் சந்திக்கவிருக்கின்றோம். அதற்கு நாட்டு மக்களின் முழு ஆதரவினையும் கோரவுள்ளோம்.

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் நான் பதவிக்கு வந்த காலம் முதல் பல்வேறு முயற்சிகளையும் முன்னெடுத்து வந்துள்ளேன். இருப்பினும் அவற்றைச் சரிவர நிறைவேற்றுவதற்குரிய சந்தர்ப்பமும் ஒத்துழைப்பும் எனக்குக் கிடைக்கவில்லை.

போரை நிறுத்திவிட்டுத்தான் விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும் என்ற நிலைப்பாட்டை அரசு ஏற்கமுடியாமல் போனமைக்குக் கடந்த கால அனுபவங்களே காரணமாகும்.

இனப்பிரச்சினைக்கு, நாடு துண்டாடப்பட்டுத்தான் ஒரு தீர்வு கிடைக்குமென்றால், அத்தகைய தீர்வை மக்கள் அங்கீகரிக்கப்போவதில்லை. நாடு பிளவுபடாத விதத்தில் தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் எந்த நேரத்திலும் தயாராகவே இருக்கின்றோம்.

இந்தத் தேர்தலில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு பெரும்பான்மை அரசாங்கத்தை அமைக்கக் கூடிய வகையில் எமக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று நாட்டு மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

நாடு துண்டாடப்படுவதிலிருந்து அதனைக் காப்பாற்றிக்கொள்வதற்குச சகல மக்களும் எம்மோடு ஒன்றிணைய வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

தேர்தலின்போது வன்முறைகள், ஊழல், மோசடிகள் என்பன இடம்பெறாமல், சுதந்திரமான தேர்தல் நடைபெற வழிபார்த்துக்கொள்ள வேண்டியது எமது கட்சியைச் சேர்ந்த ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். மக்கள் அச்சமின்றி வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்கும் நிலை உருவாக்கப்படவேண்டும்.

தேர்தல் ஆணையாளருக்கும் பொலீஸ் மா அதிபருக்கும் இது தொடர்பான முழு அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கவனத்தில் கொண்டு தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள் - என்று தெரிவித்தார். (ம)

### இழப்பீட்டுப் படிவத்தைப் பெற அறிவுறுத்து

தென்மராட்சி,ஒக்.24

சாவகச்சேரி நகர்ப் பகுதி வர்த்தகர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான படிவங்கள் நெல்லியடியில் இயங்கும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்படிவத்தினை இதுவரை பெற்றுக்கொள்ளாத மன்ற அங்கத்தவர்கள எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு மன்றச் செயலாளர் ந.சிவபாலன் அறிவித்துள்ளார். (ம-117)

# பேராசிரியர் பாலச்சந்திரனின் இழப்பால் கல்வி உலகில் பெரும் வெற்றிடம்

## இந்து சமயப் பேரவை அறிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.24

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.பாலச்சந்திரனின் மறைவு கல்வி உலகில் பெரும வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

- இவ்வாறு பேராசிரியரின் மறைவையொட்டி இந்து சமயப் பேரவை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடாதிபதியும், சிறந்த புவியியற்றுறைப் பேராசிரியரும், கல்விமானுமாகிய பேராசிரியர் பாலச்சந்திரன் மிகுந்த நிதானமும், பரந்த சிந்தனையும் படைத்த சிறந்த கண்ணியம் மிக்க பண்பாளராவார். இவர் இந்நாட்டின் கல்வி வளர்ச்சிக்காகத் தனது வாழ்வை முழுமையாக அர்ப்பணித்த பெருமைக்குரியவர். இந்து நிறுவனங்களோடு மிகுந்த தொடர்புடைய பேராசிரியர் சிறந்த இந்துசமய அபிமானியாகவும் திகழ்ந்தவர்.

உலகளாவிய ரீதியில் பல புவியியல் சம்பந்தமான ஆய்வுகளை நிகழ்த்திப் பெரும் புகழ்பெற்ற பேராசிரியரின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், பல்கலைக்கழக சமூகத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-ரி)

### சோதனைகள் தீவிரம்

யாழ்ப்பாணம்,ஒக்.24

தேர்தல்காலம் நெருங்கிக் கொண்டிருப்பதை அடுத்து குடாநாட்டில் பாதுகாப்பைப் பலப்படுத்தும் முயற்சியில் படையினர் இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதிச் சோதனைகள் அதிகரிக்கப்பட்டிருப்பதுடன், பயணிகள் மற்றும் வாகனங்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலையொட்டி யாழ்.செயலகமும் பலத்த பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

செயலகப் பகுதியில் காவல் கடமைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. செயலகம் ஊடாகச் செல்லும் பஸ்கள், வாகனங்கள் யாவும் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன. (ம-15)

# ஆசிரியர்களிடையே விளையாட்டுப் போட்டிகள்

## தமிழர் ஆசிரியர் சங்க ஏற்பாட்டில்

தென்மராட்சி,ஒக்.24

யாழ்.மாவட்ட ஆசிரியர்களுக்கான மென்பந்து கிரிக்கெட், வலைப்பந்து, சதுரங்கம் ஆகிய போட்டியினை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க யாழ்.பிரிவினர் நடத்தவுள்ளனர்.

போட்டிகள் பாடசாலை மட்டத்திலும், கோட்ட மட்டத்திலும், வலய மட்டத்திலும் நடத்தப்படும். குழுப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு ஒரு பாடசாலையில் போதிய ஆசிரியர் இல்லையெனின் ஏனைய பாடசாலை ஆசிரியர்களையும் இணைத்துப் போட்டிகளில் பங்குபற்றலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சதுரங்கம் தனியாள் போட்டிகளாக நடத்தப்படவுள்ளது.

மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் 15 ஓவர்கள் கொண்டவையாகவும் -

வலைப்பந்தாட்டம் 45 நிமிட நேரப்போட்டியாகவும் - நடத்தப்படும்.

கிரிக்கெட் போட்டிக்கு 17 பேரினதும் -

வலைப்பந்தாட்டத்திற்கு 12 பேரினதும் - பெயர் விவரங்களை அறிவிக்குமாறும், போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க யாழ்.கோட்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு சங்க யாழ்.கிளைச் செயலாளர் க.குமாரசாமி அறிவித்துள்ளார். (ம-117)

### மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஒக்.24

யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளின் குறுக்காக ஓடிய நாயினால் ஏற்பட்ட இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவரும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவருமான கனகசிங்கம் சுரேஷ் குமார் (வயது25) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-15)

# மட்டக்களப்பில் முஸ்லிம்களுக்கு தனி பிரதேச செயலர் பிரிவா?

## ஆட்சேபிக்கிறார் ஜோசப்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்ப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக-முஸ்லிம்களுக்கென - தனியான பிரதேசசெயலர் பிரிவு உருவாக்கப்படுவதை உடனடியாக நிறுத்துமாறு கோரி மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் நேற்று ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

'சோரன்பற்று மத்தி' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த பிரதேச செயலர் பிரிவால் இப்பகுதியில் வசித்து வரும் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் தற்போது நிலவி வரும் ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படும் எனவும் -

இது ஒரு நியாயமற்ற நடவடிக்கை என மக்கள் கருதுவதாகவும் - அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலில் முஸ்லிம் மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்காகவே இந்தக் குறுகிய நோக்கமுடைய நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (உ-4)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.24

மக்கள் நலன்புரிச்சங்கத்தின் விசேட முதலுதவிப் படையணி உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு கொக்குவில் அலுவலகத்தில் நடைபெறும். அனைத்து உறுப்பினர்களையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு மேலதிக ஆணையாளர் கேட்டுள்ளார். (ம-ரி)

### மானிப்பாய் மெமோறியலில் நூலக வாரம்

யாழ்ப்பாணம்,ஒக்.24

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 3ஆம் திகதிவரை நூலக வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நூல்கள் சேகரிப்பு, நூல்நிலைய மேம்பாடு, கொடிதினம் என்பன இந்த நூலகவாரத்தில் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

# கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் இடம்பெற்ற கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்ச்சியின் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம். (ஐ-135)



தென்னிந்தியத் திருச்சபையின் இன்பச்சோலை, சமாதானக் கோட்டை, ஆனந்த நிலையம் ஆகிய சமூக மேம்பாட்டுக் கல்வி நிறுவனங்களின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவில் வலி.மேற்கு பிரதேச செயலர் கலாநிதி கே.குணராஜா மாணவன் ஒருவனுக்கு பரிசில்களை வழங்குவதைப் படத்தில் காணலாம். தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், பளைப் பிரதேசசெயலர் எஸ்.புத்திசிகாமணி ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளனர். (ஐ-17)



மல்லாகம் வித்தியோதய பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். சர்வோதய செயற்றிட்ட நிறைவேற்றுநர் எஸ்.வீ.சங்கரப்பிள்ளை மங்கள விளக்கேற்றுவதை படத்தில் காணலாம். அருகில் தெல்லிப்பழை கல்விக் கோட்ட ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ. கணேசலிங்கம், மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை அதிபர் ந.மகேஸ்வரன் ஆகியோரும் உள்ளனர். (ஐ-86)



உலக ஆசிரியர் தினத்தை ஒட்டி பளை, மாசார் அ.த.க. பாடசாலையில் நடைபெற்ற விழாவில் பளைக் கோட்டக்கல்வி அலுவலர் அ.கைலாயபிள்ளை மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் வ.ஜீவரத்தினம், நாகர் கோவில் மகாவித்தியாலய அதிபர் என்.மகேந்திரன் ஆகியோரும் அருகில் காணப்படுகின்றனர். *(படம்: தென்மராட்சி செய்தியாளர்)*

## மேற்கு ஆப்கானிஸ்தானிய நகரொன்றில்

# மருத்துவமனையில் குண்டு விழுந்து 100பேர் பலி என்கிறது தலிபான்

பெஷாவர்,ஒக்.24

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க விமானங்கள் வீசிய குண்டுகளுக்கு மருத்துவமனை ஒன்று இலக்கான தில் நோயாளிகள் உட்பட சுமார் 100 பேர் உயிரிழந்துள்ளதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்கு ஆப்கானிஸ்தானிய நகரமான ஹெறாத்தில் உள்ள மருத்துவமனையே குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானதாக தலிபான் அறிவித்தபோதும், இந்தச் செய்தியை அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ட்றம்ஸ்பீல்ட் முற்றாக நிராகரித்தார்.

அமெரிக்கக் ஹெலிகளைச் சுட்டு வீழ்த்தியதாக தலிபான்கள் பரப்பி வரும் பொய்யான தகவல்களைப் போன்றே மருத்துவமனை தாக்கப்பட்ட செய்தியும் தவறானது என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில், காபூலின் வடக்கே வடக்குக் கூட்டணியின் முன்னரங்க நிலைகளை நேற்றுக் காலை தலிபான் இயக்கத்தினர் திடீரென்று தாக்கினர்.

ஆனால் இந்தத் தாக்குதல் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே, அமெரிக்க விமானங்கள் காபூல் மீது தீவிரத் தாக்குதல்களை நடத்தத் தொடங்கின. இதனால் வடக்குக் கூட்டணி மீதான தாக்குதலைத் தலிபான்கள் முடித்துக்கொண்டதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## எல்லையில் தாக்குதல் நடத்தினால்

# இந்தியாவுக்கு நல்ல பாடம் புகட்டப்படும் என்கிறார் முஷாரப்



இஸ்லாமாபாத்,ஒக்.24

எல்லைக்கப்பாலிருந்து இந்தியா தாக்குதல் நடத்தினால், அதற்கு நல்ல பாடம் புகட்டப்படும் என்று பாகிஸ்தானிய அதிபர் பர்வேஷ் முஷாரப் எச்சரித்தார்.

நேற்றுமுன்தினம் பாகிஸ்தானியத் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காஷ்மீர் விவகாரத்தில் பேச்சுடன கூடிய நடைமுறை இந்தியா பின்பற்ற வேண்டும் என்றும் முஷாரப கேட்டுக கொண்டார்.

ஆப்கானிஸ்தான் விவகாரத்தை முன்வைத்து இராணுவ ரீதியில் இந்தியா லாபம்பெற முனைவதை பாகிஸதான் ஒருபோதும் அனுமதிக்காது என்றும் -

பாகிஸ்தானிய இராணுவம் எப்போதும் எதற்கும் தயாராக இருப்பதாகவும் - முஷாரப் மேலும் குறிப்பிட்டார்.

ஆப்கானிஸ்தான் விவகாரத்தை முன்வைத்து, சர்வதேசமட்டத்தில் பாகிஸ்தானை தனிமைப்படுத்திவிட இந்தியா முயற்சிப்பது குறித்து அதிபர் முஷாரப் சீற்றமடைந்திருப்பதாக செய்திகள் முன்னர் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

# முஷாரப்புக்கு ஆதரவாக பாகிஸ்தானியர் தீமிதிப்பு

இஸ்லாமாபாத்,ஒக்.24

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொள்ளும் தாக்குதல்களுக்கு பாகிஸ்தான், ஆதரவு தெரிவித்து வருவதற்கு இஸலாமிய அடிப்படைவாதிகளிடமிருந்து கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு வரும் வேளையில், பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்புக்கு ஆதரவு தெரிவித்து பாகிஸ்தானியர்கள் சிவர் தலைநகர் இஸ்லாமாபாத்தில் தீமிதித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

12 அடி நீளமான தீக்குழியில் இறங்கி அவர்கள் தீ மிதித்ததாகக் கூறப்பட்டது. தீமிதித்தவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள். ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியொருவரும் தீ மிதித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தமது தாய்நாட்டின் மீது உள்ள அபிமானம் காரணமாகவும் -

பாகிஸ்தான் தலைவர் ஜெனரல் முஷாரப், பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவுக்கு அளித்துவரும் ஒத்துழைப்புக்கு ஆதரவு தெரிவிக்கவும் -

இந்தத் தீமிதிப்பு நடத்தப்பட்டதாக இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-9)

## பௌதிக விதிகளை உடைத்த

# உலகின் முதலாவது உலோகமற்ற காந்தம்

பரீஸ்,ஒக்.24

உலகின் முதலாவது உலோகமற்ற காந்தத்தை உருவாக்குவதில் விஞ்ஞானிகள் வெற்றிகண்டுள்ளனர். அறைவெப்பநிலையில் செயற்படும் இந்த உலோகமற்ற காந்தம் பௌதிக விதிகளை மறுபரிசீலனைக்குட்படுத்த வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒருபொருள் காந்தமாக மாற்றப்பட வேண்டுமானால் அது கட்டாயமாக உலோக அணுக்களைக் கொண்டிருக்கவேண்டும் என்பதே பௌதிக விதியாகும்.

இதற்குப் புறம்பாக, சேதன கலவைகள் சில மைனஸ் 273.15 பாகை சென்ரிகிரேட் என்ற அளவில் மிகமிகக் குளிர்ந்த நிலையில் காந்தப் பண்புகளைக் கொண்டுள்ளன. ஆனால் தற்போதைய கண்டுபிடிப்பு இந்த பௌதிக விதிகளை உடைத்துள்ளது.

உலோகமற்ற காந்தம் புளோரினை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

### ஜெயலலிதா முதல்வராவதே மக்கள் விருப்பமாம்

சென்னை,ஒக்.24

நீதிமன்றத் தீர்ப்பைவிட மக்கள் தீர்ப்பே உயர்ந்தது என்பதை நடந்து முடிந்த தமிழக உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டுவதாக நாடாளுமன்ற அ.தி.மு.க.அவைத் தலைவர் பி.எச்.பாண்டியன் தெரிவித்தார்.

ஜெயலலிதா மீண்டும் தமிழக முதல்வராவதை மக்கள் விரும்புவதையே தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டுவதாகவும் அவர் கூறினார்.

### ஜனநாயக மானபங்கம்; கருணாநிதி கவலை

தமிழகத்தில் நடந்து முடிந்த உளளூராட்சித் தேர்தலின் போது அ.தி.மு.கவினர் ஜனநாயகத்தை கொலை மட்டுமல்ல, மானபங்கமும் செய்துவிட்டனர்.

இவ்வாறு தி.மு.க.தலைவர் கருணாநிதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

வாக்குச்சாவடிகளை கைப்பற்றுதல் உட்பட பல அராஜகங்களில் பொலீஸாரின் உதவியுடன் அ.தி.மு.கவினர் ஈடுபட்டதாகவும் அவர் கூறினார்.

### மு.க.ஸ்டாலின் மேயரானார்

சென்னை மேயர் பதவிக்கான தேர்தலில் மு.க.ஸ்டாலின் வெற்றி பெற்று, மீண்டும் சென்னை நகர மேயரானார்.

தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.மு.க.வேட்பாளரை விட 5ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் ஸ்டாலின் வெற்றி பெற்றதாக, நேற்று அதிகாலை 2 மணிக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

# வீழ்த்தப்பட்ட ஹெலியின் பாகம் தலிபான் இயக்கத்தால் மீட்பு

காபூல்,ஒக்.24

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதலின் போது தம்மால் சுட்டுவீழ்த்தப்பட்ட அமெரிக்கக் ஹெலியின் சிதைவுகளை மீட்டுள்ளதாக தலிபான்கள் கூறியுள்ளனர்.

'தைமெண்ட்' மாகாணத்தில் இந்த ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்டதாக தலிபான்கள் கூறியுள்ளபோதிலும், ஆப்கானிஸ்தான் மீதான 3 வாரகால இராணுவ நடவடிக்கையில் ஹெலி எதனையும் இழக்கவில்லை என்று அமெரிக்கா தெரிவித்தது.

இதேவேளை, தலிபான் இயக்கத்தினரால் மீட்கப்பட்டதாகக் கூறப்படும் ஹெலியின் சக்கரங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்களுடன் கூடிய பாகம் ஆகியவற்றை கட்டாரில் 'அல் - ஜெஸீரா' தொலைக்காட்சி காண்பித்தது.



**ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மேற்கொண்டு வரும் தாக்குதல் நடவடிக்கையின் போது உயிரிழந்த முதல் அமெரிக்க வீரரான விமானப்படை சார்ஜன்ட் எவாண்டர் அன்ட்ரு (வயது36) என்பவரின் உடல் வேர்ஜினியாவில் நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம்.**

**கடந்த 10ஆம் திகதி உயிழந்ததாகக் கூறப்படும் சார்ஜன்ட் அன்ட்ரு விபத்து ஒன்றிலேயே இறந்ததாக அமெரிக்கா தெரிவித்தது.**

# அமெரிக்க அரசு ஊழியர் இருவரின் மரணத்துக்கு 'அந்திரெக்ஸ்' காரணம்?

வாஷிங்ரன்,ஒக்.24

அமெரிக்க அரசின் நிதித்துறையின் தபால்களை கையாளும் பகுதியில் பணியாற்றிய இரு ஆண் ஊழியர்கள் இறந்ததற்கு 'அந்திரெக்ஸ்' கிருமி காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இறந்தவர்களின் சக ஊழியர்கள் இருவருக்கு 'அந்திரெக்ஸ்' தொற்று ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே, இந்தச் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. இறந்த ஊழியர்கள் 'அந்திரெக்ஸ்' கிருமியால் பாதிக்கப்பட்டு இறந்திருப்பது உறுதி செய்யப்பட்டால், அமெரிக்காவில் இந்த மாதம் 'அந்திரெக்ஸ்' தாக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக உயரும்.

அந்திரெக்ஸ் கிருமியால் பாதிக்கப்பட்டு, புளோரிடாவில் ஊடகவியலாளரான 63 வயதுடைய மொக்ஸ்டீங்க் கடந்த 7ஆம் திகதி இறந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## பயங்கரவாத எதிர்ப்புப் போர்வையில்

# இந்தியாவும் அமெரிக்காவும் மனித உரிமைகளை மீறுகின்றன

## சர்வதேச அமைப்பு கண்டனம்

வாஷிங்ரன்,ஒக்.24

பயங்கரவாதத்தை எதிர்க்கும் நடவடிக்கை என்ற பெயரில், இந்தியாவும், அமெரிக்காவும் மனித உரிமைகளுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும் சட்டங்களையும், விதிமுறைகளையும் வகுத்துவருகின்றன.

இவ்வாறு, அமெரிக்காவின் வாஷிங்ரனில் தலைமையகத்தைக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பு மையம் (Human Rights Watch) குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த மையத்தின் ஆசியப் பிரிவின் துணைஇயக்குநர் ஜோஸ் சாண்டஸ் இந்தக் குற்றச்சாட்டை வெளியிட்டார்.

பயங்கரவாதத்தை தடுப்பதற்காக, இந்த இரு நாடுகளும் தத்தமது பொலீஸ் துறைகளுக்கு அதிகாரங்களை வரைமுறையின்றி புதிய சட்டங்கள் மூலம் வழங்கிவருவதாகவும் -

ஆனால், இந்தச் சட்டங்களால், பொலீஸாரின் அராஜகங்கள் அதிகரித்து வருவதாகவும் - சாண்டஸ் மேலும் தெரிவித்தார்.

குறிப்பாக, வெளிநாட்டவர்கள் கடுமையான நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படுவதுடன், அவர்களது மனித உரிமைகள் மிக மோசமான விதங்களில் பொலீஸார் மற்றும் குடிவரவு அதிகாரிகளால் மீறப்படுவதாகவும் அவர் மேலும் கவலை தெரிவித்தார். (ஒ-4)

# தி.மு.க. - பா.ஜ.க. இடையே விரிசலடையும் உறவுகள்

சென்னை,ஒக்.24

இந்தியாவில் பாரதிய ஜனதாக் கட்சிக்கும் தி.மு.கவுக்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து அடுத்தடுத்து தி.மு.கவுக்கும் கருணாநிதி உட்பட அதன் தலைவர்களுக்கும் எதிராக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் -

அவை குறித்து பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு நடந்து கொள்ளும் விதம் தொடர்பாக தி.மு.க. அதிருப்தியடைந்துள்ளதாகவும் - கூறப்படுகிறது.

மத்திய அரசு, தமிழகத்தைப் பொறுத்தவரையில் அ.தி.மு.கவையும், தி.மு.கவையும் ஒரே தட்டில் வைத்துப் பார்ப்பது, தி.மு.கவினரை அதிருப்தியடையச் செய்துள்ளதாக, இனம்காட்டவிரும்பாத தி.மு.க. பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

பா.ஜ.க. தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தியின் மகளது திருமண விழாவில் கலந்துகொள்ள பிரதமர் வாஜ்பாய் சமீபத்தில் தமிழகம் வந்திருந்தபோது, அவரைச் சந்திப்பதை கருணாநிதி தவிர்த்ததற்கு இந்த அதிருப்தியே காரணம் என்றும் அந்தப் பிரமுகர் மேலும் கூறினார்.

இதேசமயம், சென்னையில் பிரதமர் வாஜ்பாயிடம், 'கருணாநிதி கைது செய்யப்பட்டது குறித்து செய்யப்பட்ட முறைப்பாட்டின் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?' என்று செய்தியாளர் கேட்டதற்கு, 'முறைப்பாடு உண்மையானதாக இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று தெரிவித்தார்.

பிரதமரின் இந்த மேம்போக்கான பதில் கருணாநிதியை விசனமடையச் செய்துள்ளதாகவும் -

அ.தி.மு.க. குறித்து மத்திய அரசிடம் இனிமேல் முறைப்பாடு செய்வதில்லை என முடிவெடுத்துள்ளதாகவும் -

தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது தமிழகத்தில் இடம்பெறும் உள்ளூராட்சித் தேர்தல்களின் முடிவுகளில், கட்சிகளுக்கு கிடைக்கும் வெற்றி தோல்விகளின் அடிப்படையிலேயே, தி.மு.க. - பா.ஜ.க. இடையேயான உறவின் எதிர்காலம் அமையும் என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். (ஒ-4)

# இந்தோனேஷியக் கடற்பகுதியில் படகு கவிழ்ந்ததில் 350பேர் பலி!

## 8வயதுச் சிறுவன் உட்பட 44பேர் தப்பினர்

இந்தோனேஷியாவின் 'ஜாவா' தீவின் அருகே உள்ள கடற்பகுதியில், சட்டவிரோதக் குடியேறிகளை ஏற்றி வந்ததாகக் கருதப்படும் படகு ஒன்று நேற்றுமுன்தினம் கவிழ்ந்ததில், சுமார் 350பேர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர்.

8வயதுச் சிறுவன் ஒருவன் உட்பட 44பேர் இந்த விபத்தில் உயிர் தப்பியுள்ளனர். ஆயினும் உயிர் தப்பிய சிறுவனின் குடும்பத்தைச் சேர்ந்த 21பேர் இந்த விபத்தில் இறந்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

விபத்துக்குள்ளான படகில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஈராக்கியர்கள் என்றும் -

அத்துடன் ஈரான், ஆப்கானிஸ்தான், பலஸ்தீனம், அல்ஜீரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் படகில் இருந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் உயிர்தப்பியவர்கள் கடலில் நீண்ட நேரம் தத்தளித்துக் கொண்டிருந்தபோது, இந்தோனேஷியக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் இந்தோனேஷியாவின் போஹுறா துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக சர்வதேசக் குடியேற்ற அமைப்பு தெரிவித்தது. (ஒ-4)

## யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி தரம் 6 இற்கான அனுமதி - 2002

கல்லூரியில் 6 ஆம் தரத்துக்கான அனுமதிகள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. தகுதி உடையோர் அலுவலகத்தில் பெறப்பட்ட விண்ணப் பப்படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். இம்முறை தரம் 6 அனுமதியின்போது நன்கொடைகள் அறவிடப் படமாட்டா. விண்ணப்ப முடிவு திகதி 20-11-2001 ஆகும்.

(சி/18827) - அதிபர்

உ

## கேதாரகௌரி விரத பூஜை

### 25 - 10 - 2001

கேதாரகௌரி விரதம் அனுட்டிப்பவர்கள் கீழ் வரும் ஆலயங்களில் பெயர்களைப் பதிவு செய்து நாளை முதல் தினசரி பூஜையில் பங்குகொள்ளவும்.

1. நுணாவிற்குளம் கண்ணகை அம்பாள் கோயில் காலை 9-30 மணி
2. நெல்லியடி ஸ்ரீ காளி கோயில் பிற்பகல் 2-00 மணி (மகா வித்தியாலயம் அருகில்)

சாவகச்சேரி அமிர்தபாஷினி வாரியப்பர் சுவாமி திருப்பாதத்தில் வைத்துப் பூசித்த நூல் உண்டு.

— சிவஸ்ரீ து. கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
திருஞானசம்பந்தர் வீதி,
வட்டுக்கோட்டை. (93769)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம், கரவெட்டி.

2001ஆம் ஆண்டு 5 ஆந்தர புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்றுக்கொண்ட

| மாணவர்களான | | Rank |
|---|---|---|
| செல்வன் இ. மயூரேசன் | 156 | 41 |
| செல்வி செ. அருளினி | 152 | 68 |
| செல்வன் நா. பவீந்திரன் | 143 | 172 |
| செல்வன் க. ரவிராஜ் | 132 | 412 |

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, கல்லூரி அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

(93773) -பழையமாணவர்கள்

# மரண அறிவித்தல்கள்

## ஆஸ்பரி கணேஷ் தனபாலன்

ஆஸ்பரி கணேஷ் தனபாலன் 21—10—2001 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் ஏஞ்சலீனின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற ஜெயசிங்கம் ஆஸ்பரி மற்றும் புளோரா செல்வமணி (மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை திருமதி புனிதம் (வடலி யடைப்பு) ஆகியோரின் அன்பு மருமகனும் கமலா ரஞ்சன், கெப்சி தயசிறி, ஈவா ஞானப்பொன்ராஜா, செல்வினி சாம்தேவானந்தன் ஆகியோரின் மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர் வரும் (27—10—2001) சனிக்கிழமை இலங்கை நேரப்படி பிற்பகல் 4-30 மணிக்கு லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

அருள்பிதா ந.ஜே.ஞானப்பொன்ராஜா
தொடர்பு முகவரி:-
Mrs. A Asbury,
249, Basinghol Garden, Sutton,
Surrey SM 26 AP, U. K. (93779)

திருமதி

## தம்பிரத்தினம் சோதிலட்சுமி (தேவி)

மல்லாகம், அம்பத்தை லேணைப் பிறப்பிடமாக வும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிரத்தினம் சோதிலட்சுமி (தேவி) அவர்கள் 20-10-2001 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து— மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், தம்பிரத் தினம் (ஜேர்மனி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பிரகாஷ் (யா/இந்துக் கல்லூரி மாணவன்), சுகன்யா (யா/மல்லாகம் மகா வித்தியாலய மாணவி) ஆகியோரின் அன்புத் தாயா ரும் ஆனந்தராசா, குணசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவரத்தினம் (கொழும்பு), ஜீவரத் தினம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25 - 10 - 2001) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-

திருமதி ப. நவரத்தினம் (பத்மினி)
555/27, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (93780)

## 30ஆம் திகதி வரை தபால் மூலம் வாக்களிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக். 24

டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கு தபால் மூலம் வாக்களிக்கவுள்ள வாக் காளர்கள் தமது விண்ணப் பங்களை அனுப்பி வைப்பதற் கான இறுதித் தினம் எதிர் வரும் 30 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை வரை நீடிக்கப் பட்டுள்ளது.

நேற்று மாலை தேர்தல் ஆணையாளரினால் இந்த அறிவித்தல் தனக்கு விடுக்கப் பட்டதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையா ளர் எஸ். நடராசா தெரி வித்தார்.

யாழ். மாவட்டத்தில் இது வரையும் மேற்படி விண்ணப் பங்களை அனுப்பி வைக்காத தபால்மூல வாக்காளர்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்பு அனுப்பி வைக்குமாறும் அவர் தெரிவுத்துள்ளார்.

(க—10—ரி)

## பெற்றோர் தின விழா நாளை

யாழ்ப்பாணம், ஒக். 24

புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகாவித்தியாலய பெற் றோர் தினமும் வாணி விழா வும் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பாட சாலை மண்டபத்தில் அதிபர் எஸ். சண்முகலிங்கம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக தீவக முன் பள்ளி உதவிக் கல்விப் பணிப் பாளர் ரி. தவராசாவும், சிறப்பு விருந்தினராக ஒய்வு பெற்ற அதிபர் சி. இரத்தின சபாபதியும் கலந்துகொள்வர் சிறப்புரைகள், நடனங்கள், நாடகங்கள் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள் ளன.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு குழந்தைகளுக்கு வித்தியாரம் பம் இடம்பெறும். (க-9)

## உதைபந்தாட்டம்

வலி. வடக்கு ஒக். 24

யாழ்ப்பாணம் கல்வி வல யத்திற்கு உட்பட்ட கோட் டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன் கிழமை யாழ்ப்பாணம் இந் துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங் களின் விவரம் வருமாறு:

காலை 8.30 மணிக்கு:

**16 வயதுப்பிரிவு**

★ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் எதிர் நாவாந் துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

**18 வயதுப்பிரிவு**

★ கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்.

★ உரும்பிராய் இந்துக் கல்லூரி எதிர் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலம்.

பிற்பகல் 2.00 மணி

**16 வயதுப்பிரிவு**

★ யாழ். புனித யோசப் வித்தியாலயம் எதிர் யாழ். இந்துக் கல்லூரி

**18 வயதுப்பிரிவு**

★ புத்தூர் சோமஸ்கந் தாக் கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி.

★ யாழ். புனித யோசப் வித்தியாலயம் எதிர் யாழ். இந்துக் கல்லூரி. (ம-86)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 24

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கி னேஸ்வரா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு அதிபர் திருமதி அ. சண்முகானந் தன் தலைமையில் நடை பெறும்.

பிரதம விருந்தினராக யாழ். கல்வித் திணைக்கள பொறியியலாளர் ஜி. சிவ பாலன் கலந்துகொள்வார். (க)

# குடாநாட்டில் கடும் மழை

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ். குடாநாட்டில் நேற்று முன்தினம் இரவு ஆரம்பித்த கடும் மழை நேற்று அதிகாலை வரை நீடித்தது.

இதனால் குடாநாட்டின் தாழ்நிலப் பகுதிகளில் வெள் ளம் தேங்கி நின்றது. வயல் களும் வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தன.

நேற்று முழுநாளும் வானம் மப்பும் மந்தாரமுமாகக் காணப்பட்டது. ஆனால் மாலை வரை பெரிதாக மழை பெய்யவில்லை.

சீரற்ற காலநிலை காரண மாக நேற்றையதினம் குடாக் கடலுக்குக் குறைந்த எண் ணிக்கையான மீனவர்களே மீன்பிடிக்கச் சென்றனர்.

சின்னக்கடைச் சந்தைக்கு சொற்ப அளவு மீன் கொண்டு வரப்பட்டதால் விலை மிக வும் உயர்வாகக் காணப்பட் டது.

முட்டை விலை 5 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப் பட்டதால் குருநகர் மக்கள் நேற்றைய தினம் மீனுக்குப் பதிலாக முட்டையை வாங் கிச் சென்றதை அவதானிக்க முடிந்தது. (க-15-51)

# யாழ். வண்ணை சங்கக் கடை நள்ளிரவில் உடைத்துத் திருட்டு

கொட்டும் மழையைப் பயன் படுத்தித் திருடர் கோஷ்டி ஒன்று யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்றில் தமது கைவரிசை யைக் காட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள ''5 ஏ'' இலக் கக் கிளையே திருடரின் கைவரிசைக்கு இலக்கானது.

முன்பக்கக் கதவுகளை உடைத்துச் சங்கக் கிளைக் குள் சென்ற திருடர்கள் நிவாரண விநியோகத்துக்கு வைக்கப்பட்டிருந்த பல ஆயி ரம் ரூபா பெறுமதிவாய்ந்த பால்மா பக்கட்டுக்கள் மற் றும் சில பொருள்களைச் சூறையாடிச் சென்றிருப்ப தாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் திருட்டுத் தொடர் பாக சங்க நிர்வாகம் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது. (க-17)

## மனமார்ந்த நன்றி

கடற்றொழில் தடைக்கு எதிராக நேற்று (23-10-2001) நடைபெற்ற அடையாள எதிர்ப்புப் போராட்டத்தில் ஒத்துழைப்பு வழங்கிய வர்த்தகர் கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், அங்காடி வியாபாரிகள், போக்குவரத்துப் பகுதியினர், அரச ஊழியர்கள், இறங்குதுறைத் தொழிலாளர்கள், பாரவூர்திச் சங்கத்தினர், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், அபிவிருத்தித் தொண்டர்கள், எமது அழைப்பு எதுவுமில்லாமல் போராட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து மக்களுக்கும் மனம்நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கடற்றொழில் சமூகமும், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசமும்.**

பருத்தித்துறை. (கி/18831)

## கண்ணீர்க் காணிக்கைகள்

எமது கலைப் பீடாதிபதி

### பேராசிரியர் எஸ். பாலச்சந்திரன்

அவர்களின் மறைவையிட்டு எங்கள் கண்ணீர் அஞ்சலி யைச் செலுத்துகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந் திக்குப் பிரார்த்திக்கும் அதேவேளை, அவர் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதா பத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர், விரிவுரையாளர்கள், துறைசார் ஊழியர்கள்,
நடனத்துறை, இராமநாதன் நுண்கலைப்பீடம்,
மருதனார்மடம். (93786)

## Emilianuspillai Technical Institute-Kayts

## பயிற்நெறி

மேற்படி நிறுவனத்தில் மின்ஒட்டு வேலை, உலோக வேலைப்பயிற்சி நெறிகள் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ளன.

இந்தப் பயிற்சி நெறிகளுக்கு எந்தவித கட்டணமும் இன்றி இலவசமாக பயிற்றுவிக்கப்படுகின்றன.

உங்கள் விண்ணப்பப்படிவங்களுக்கு காரியாலத்துடன் தொடர்பு கொள்ளவும்.

காலம்: 24-10-2001 தொடக்கம் 30-10-2001 வரை.

விண்ணப்பப்படிவம் மேற்காணும் முகவரியில் பெற் றுக்கொள்ளவும்.

(93783) -இயக்குநர்

## கண்ணீர்க் காணிக்கை

இராமநாதன் நுண்கலைப்பீட
சிரேஷ்ட விரிவுரையாளர்
திருமதி கிரிஷாந்தி ரவீந்திரா அவர்களின்
அன்புத் தந்தை

### இராஜா சேனாதிராஜா

அவர்கள் 24 - 09 - 2001 இல் காலமானதையிட்டுத் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னா ரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், விரிவுரையாளர்கள்,
நடனத்துறை, துறைசார் ஊழியர்கள்,
இராமநாதன் நுண்கலைப்பீடம்,
மருதனார்மடம். (93735)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடுகள் விற்பனைக்கு

33, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் இரு வீடுகள் விற்பனைக்கு உண்டு. இரண்டினதும் விலை ரூபா 18 லட்சம் மட்டுமே. பார்வையிட்ட பின்பு பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: சுறாஜ் சோகந்தரம், 25, சில்வெஸ்ர வீதி, கல்கிசை (கொழும்பு). தொலைபேசி - 074 - 201582, 01-728767. (C/18718)

## தவறிவிட்டது

கருணாகரன் கீதா என்பவருடைய 1 3/4 பவுண் நிறையுள்ள MEERA என்னும் பெயர் போட்ட பென்ரனுடன் தங்கச் சங்கிலி ஒன்று 750 இலக்க பருத்தித்துறை பஸ்ஸில் 20.10.2001 சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கருணாகரன் கீதா. ஆயத்தடி கைதடி மேற்கு, கைதடி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (93732)

உச்சி ஒடை, மானிப்பாயைச் சேர்ந்த இராஜேஸ்வரன் சுரேஷ்குமார் என்பவருடைய தேசிய அ.அ.(இல. 691811913V), விசேட அ.அ. (இல. 0905008171) என்பன பொன்னாலைக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேலுள்ள விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (93751)

## இசை வகுப்புகள்

ஓர்கன், மெலோடிக்கா, கிற்றார், புல்லாங்குழல், வயலின், வாய்ப்பாட்டு, வீணை வகுப்புகள் விஜய தசமி அன்று 2.30 - 4.30 வரை நடைபெறும். விவரங்களுக்கு: செல்வி வாசுகிரங்கன், மே/பா: து.விசாகராசா, ஆலடி, உயரப்புலம், ஆனைக்கோட்டை. (93722)

சகல மேலைத்தேய, கீழைத்தேய இசை வகுப்புகளும் விஜயதசமி அன்று 4.30 - 6.30 வரை நடைபெறும். தொடர்பு: செல்வி வாசுகிரங்கன், 62/1, வைமன் வீதி, நல்லூர், 16/2, கச்சேரி நல்லூர் வீதி. (93721)

## விற்பனைக்கு

**HONDA LANCER C-70** புதியது (பதியப்படாதது) **M.O.D** ஆவணங்களுடன் ரூபா 85,000/= மற்றும் **HONDA C-50** ஆவணங்களுடன் ரூபா 25,000/= விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு: ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. (பார்வையிட மாலை 4-6 மணி) (93744)

VESPA - 150 ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr.K.நடராஜா, மூளாய் றோட், மூளாய். (93761)

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

பகிசா, பிற்மா, சமிரா இன புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆனைக்கோட்டை சந்தி. T.P: 3529, 2867. (93757)

## பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு

சமிரா இனக் கறுப்புப் பேட்டுக் குஞ்சுகளும், சேலான் புறொயிலர் குஞ்சுகளும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி.குணபாகன், 1014, கே.கே.எஸ். வீதி, பெரியபுலம் பாடசாலைக்கு முன்பாகவும்; 4, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகிலும் பெற்றுக் கொள்ளலாம். T.P:3353. (93758)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக
கலைப்பீடாதிபதி, பேராசிரியர்
**செல்லத்துரை பாலச்சந்திரன்**
அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நூலக சமூகம்.*
*யாழ். பல்கலைக்கழகம்.*

(93765)

---

நல்லூர் றொதேண் விளையாட்டுக் கழகம்
நடத்தும்
**பரா வெற்றிக்கிண்ண மென்பந்து கிரிக்கெற்**
*மேற்படி போட்டிக்கான விண்ணப்பப்படிவம் பெறும்இடம்:*
**நியூ ராதிகாஸ் நகை மாளிகை** (வின்சர் தியேட்டர் முன்பாக)
*விண்ணப்ப முடிவு திகதி:* **28.10.2001**

*- செயலாளர்.*

(93762)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 28 - 08 - 1920



அரன் அடியில் 04 - 11 - 2000

### திருமதி விசாலாட்சி பரராஜசிங்கம்

**திதி: பூர்வபக்க அட்டமி**

**அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து**
**எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்**
**பாசத்தின் திருவுருவமாய்த் திகழ்ந்த**
**எம் அன்புத் தாயே!**
***உங்களது ஆத்ம சாந்திக்காக நாம்***
***ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.***

*"பவள வாசம்"*
*573, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(93759)

**- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

---

## 24~10~2001 முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



HAPPY BIRTHDAY

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த
**இராமேஸ்வரன் - சரோஜினிதேவி**
தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வன்
**செல்வன் பவித்திரன்**

**தனது முதலாவது பிறந்தநாளை**
**இன்று (24~10~2001) புதன்கிழமை**
**சோமசுந்தரம் வீதியில் உள்ள தனது**
**இல்லத்தில் வெகுவிமரிசையாகக்**
**கொண்டாடுகிறார்.**
**இவரை அன்பு அப்பா, அம்மா,**
**ஆசை அக்கா, அப்பம்மா,**
**அம்மம்மா, வேவி அப்பம்மா,**
**பெரியப்பாமார், பெரியம்மாமார்,**
**மாமாமார், மாமிமார், அத்தைமார்,**
**சித்தப்பா, அண்ணன்மார்,**
**அண்ணிமார், அக்காமார்,**
**அத்தான்மார், மச்சான்மார்,**
**மச்சாள்மார் மற்றும் அனைவரும்**
**இறைவன் அருளால் பல்கலையும்**
**கற்று சீருஞ்சிறப்பும் பெற்று**
**பல்லாண்டு வாழ்கவென**
**வாழ்த்துகின்றார்கள்.**

தகவல்:
செ.இராமேஸ்வரன்
(கௌரி அழகுமாடம்)

**செல்வன் பவித்திரன்**

*சோமசுந்தரம் வீதி,*
*ஆனைக்கோட்டை.*

(93756)

---

## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை கல்விக்கோட்ட அதிபர் சங்கச் செயலாளர்
**திரு. ஆ. குமரேசமூர்த்தி**
அவர்களின் அன்புத் தந்தையார்
**கதிர்காமு ஆறுமுகம்**
அவர்கள் 22.10.2001 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

***கோட்ட கல்வி அதிகாரி, அதிபர்கள்,***
***ஊர்காவற்றுறைக் கோட்டம்.***

(93760)

---

## நெஞ்சகலா நினைவஞ்சலி

**31ஆம் நாள் நினைவஞ்சலியும்**
**ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்**

**14ஆம் ஆண்டு.....**





| அமரர் சின்னையா நல்லதம்பி | | அமரர் நல்லதம்பி விக்னேஸ்வரன் |
|---|---|---|
| 16-05-1926 ← | பிறப்பு | → 06-03-1967 |
| 24-09-2001 ← | இறப்பு | → 11-08-1987 |

**அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாயிருந்த**
**உங்கள் நினைவால் நித்தம் நித்தம் வாடி வெந்து**
**நினைவெல்லாம் நீங்களேயாகி நொந்து சித்தம் கசிந்து**
**உங்கள் ஆத்மா இறைவனடி சேர வேண்டுகின்றோம்.**

இன்று (24.10.2001) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.**

*புது வீதி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*

(93764)

---

## மரண அறிவித்தல்

### திருமதி எம்பெருமான் இராசலட்சுமி

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், இமையாணன் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட எம்பெருமான் இராசலட்சுமி நேற்றுமுன்தினம் (22-10-2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் எம்பெருமான்(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், **A.M.C.** உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை) அவர்களின் மனைவியும் (கொழும்பு), சட்டத்தரணி ராதாவின்(லண்டன்) அன்புத்தாயாரும், மரியரட்ணத்தின்(லண்டன்) அன்பு மாமியாரும், அகலேதனின்(**U.K**) பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது நல்லடக்கம் நேற்று (23-10-2001) செவ்வாய்க்கிழமை வல்வை மயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மகள்: ராதா மரியரட்ணம்**
*(சட்டத்தரணி U.K)*
*ப.இராஜேஸ்வரி உடுப்பிட்டி.*

*இமையாணன்,*
*... வீதி,*
*உடுப்பிட்டி.*

(C/18823)

# பாராட்டி நன்றி நவில்கின்றோம்

யா/கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வித்தியாலய
கட்டட நிதி ஒதுக்கீடு - 2001

மேற்படி பாடசாலை கட்டட வேலைக்கான 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 2 1/2 லட்சம் ரூபா நிதியினை உடனடியாக வழங்கியமைக்காக



மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. பிரதம அமைப்பாளர்
**உயர்திரு. கே.வி.குகேந்திரன்**
(ஜெகன்) அவர்களையும்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவருமான
**உயர்திரு. ந.மதனராஜா (J.P.U.M.)**
அவர்களையும்
நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி.
ஊர்காவற்றுறை.
(93777)

# விற்பனையாகின்றன
## புதிய தீபாவளி வாழ்த்துமடல்கள்

☆ வெவ்வேறு வடிவங்களில் பல அளவுகளில் புதிய தீபாவளி வாழ்த்துமடல்கள்
☆ 2002ஆம் ஆண்டுக்கான பொக்கட் கலண்டர்
☆ ஆங்கிலத்தில் பேச்சுத்திறன்
ஆசிரியர் - தில்லைமோகன்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. (C/18830)

ஸ்ரீகாந் புத்தகசாலை
இல.165, மின்சார நிலைய வீதி,
பஸ் நிலையம் முன்பாக,
யாழ்ப்பாணம்.

மக்மிலன் புத்தகசாலை
இல.3, பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.

# 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
1932 - 04 - 09



மறைவு
2001 - 09 - 24

**திருமதி திலகவதி தர்மலிங்கம் (யோகம்)**

*அன்போடு எமை வளர்த்து ஆளாக்கிய அன்னையே!*
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

24.09.2001 இல் சிவபதமடைந்த எமது அன்னையின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24-10-2001) புதன்கிழமை சுன்னாகத்திலுள்ள இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
*சாவகச்சேரி வடக்கு,*
*மீசாலை.*

தற்காலிக முகவரி:
*சுன்னாகம்.*
(93771)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
11 - 10 - 1917



மறைவு
04 - 11 - 2000

**திருமதி சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை**
திதி: ஐப்பசி மாத பூர்வபக்க அட்டமி

அன்புக்குப் பொருள் சொல்லி
அம்மா என்பதற்கு இலக்கணமாய்
அனைவரையும் நேசமுடன் இன்புறவே அரவணைத்து
அவனியிலே வாழ்ந்தாய் ஆருயிர் அம்மாவே!

அன்பு மனையை அறம் வளர்க்கும் ஆலயமாய்
அவனியிலே நீயும் இல்லறப் பயிர் வளர்த்தாய் - இன்று
ஆண்டவன் அடியிணைக்கு அர்ச்சிக்கும் மலரானாய்
ஆண்டொன்று சென்றாலும் அழியாது உன்நினைவு!

*கணையன் தோட்டம்,*
*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.*

கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(C-18824)

# திவ்வியன் நீதிமன்றில் நேற்று ஆஜர்

யாழ்ப்பாணம்,ஒக்.24

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் யாழ்.பல்கலைக்கழக மாணவனான கிருஷ்ணசாமி திவ்வியன் நேற்று மீண்டும் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

நவம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை இவரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்கினராஜா உத்தரவிட்டார். (க-10-ரி)

# மட்டு.மாவட்ட ரெலோ வேட்பாளர்கள்

மட்டக்களப்பு,ஒக்.24

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ரெலோ சார்பாகப் போட்டியிடவுள்ள இரண்டு வேட்பாளர்களின் பெயர்களை அந்த அமைப்பு நேற்று அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த தம்பிராஜா தங்கவடிவேல், ரெலோ அமைப்பின் உப தலைவர் இந்திரகுமார் பிரசன்னா ஆகியோரே அந்த இரு வேட்பாளர்களும் ஆவர். (க-4)

# கசிப்பு விற்ற மூவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம்

தென்மராட்சி,ஒக்.24

குப்பிளான் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட இரு பெண்கள் உட்பட மூன்று பேருக்கு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் 30ஆயிரத்து 500 ரூபாவினை அபராதமாக விதித்துள்ளார்.

சுன்னாகம் மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி நா.கிருபானந்தனால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் குற்றவாளியாகக் காணப்பட்டவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

குப்பிளானைச் சேர்ந்த சிவகுமார் சாந்தமலர் என்பவர் 67 போத்தல் கோடா, 13 1/2 போத்தல் கசிப்பு ஆகியவை வைத்திருந்த குற்றத்திற்காக 20 ஆயிரம் ரூபாவும், கணபதி இரத்தினம் என்பவர் 9 போத்தல் கசிப்பு வைத்திருந்த குற்றத்திற்காக 10 ஆயிரம் ரூபாவும், ரவிச்சந்திரன் பிரமீளா என்பவர் கசிப்பு உற்பத்தி உபகரணம் வைத்திருந்த குற்றத்திற்காக 500 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது. (க-117)

# அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சிப் பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலய அலுவலகத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (க)

# நியூட்டன்
142, ஸ்ரான்லி வீதி, யாழ்.

☆ A/L 2002 - Costing
Tue.,Thu.-3.15-4.15
☆ Management Acc.
Mon., Fri. 6.15-7.15 (a.m.)
☆ A/L 2002-துரிதமீட்டல
ஆரம்பம்:- 27.10.2001
Sat., Sun. 8-9, 4-5
By:-A. கலைச்செல்வன்

O/L ENGLISH PAPER
Sat.,sun. 7-8 - Tue.,Fri. 5-6
நடைபெறுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்:-
Sat.,Sun.-8-9 4-5
By:- R. Maheswaran
(93782)

# ராஜா யாழ்ப்பாணம்

விஜய், சிம்ரன் நடித்த
**ப்ரியமானவளே**
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
26.10.2001 வெள்ளி முதல்
குணால், மோனல் நடித்த
***பார்வை ஒன்றே போதுமே***
(C/18719)

# நாகம்ஸ் சுன்னாகம்

இன்று மட்டும்
**THE PLOT**
(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30, 5.30 (பி.தே.)
நாளை முதல்
**ஆயிரத்தில் ஒருவன்**
(93734)

# நல்லூர் பிரதேச சபை அறிவித்தல்

வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்மொழி விவகார அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களால் விவசாயத் திணைக்களம், கமநல சேவைத் திணைக்களம், பிரதேச சபைத் தலைவர்கள், அரசாங்க அலுவலகங்களைச் சேர்ந்த அதிகாரிகளுடனும் விவசாயிகளுடனும் நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போது யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைக்குட்பட்ட சந்தைகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப கீழ்க்கண்ட நிபந்தனைகளை நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி, கொக்குவில் சந்தைகளில் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, இது பற்றித் தங்களது அபிப்பிராயங்களை விவசாயிகள், வியாபாரிகள், பாவனையாளர்கள் ஆகியோர் இத்திகதியிலிருந்து ஏழு நாள்களுக்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## 1. சந்தைக் குத்தகை

1. சந்தையில் விற்கப்படும் மொத்தக் காய்கறிகளுக்கு ரூபா 100/- இற்கு 3% அறவிடப்படல் வேண்டும். ரூபா 1,000/- இற்கு மேற்பட்டால் ஒவ்வொரு 1,000 ரூபாவிற்கும் 2% அறவிடப்படல் வேண்டும்.
2. பணத்தை நிறுவைத் தராசு மேடையில் வைத்து உடன் வழங்கல் வேண்டும்.
3. *கழிவு விலைகள்*
   மரக்கறி வகைகளுக்கு
   போற பைக்கு - 2 கிலோ
   சாக்குக்கு - 3 கிலோ
   கிழங்கு வகைகளுக்கு (மரவள்ளி, கரணை)
   50 கிலோவுக்கு உட்பட்டால் - 5 கிலோ
   அதற்கு மேற்பட்டால்
   10 கிலோவுக்கு - 1 கிலோ
4. தரத்தையும் விலையையும், வியாபாரிகள் நிறுவைத்தராசு இடத்தில் வைத்து தீர்மானிக்கப்பட்டு குத்தகை செலுத்தல் வேண்டும்.
5. வாழைக்குலைக்கு
   10 கிலோவுக்கு மேற்பட்டால் - 3 கிலோவும்
   அதற்கு மேற்பட்டால் - 5 கிலோவும் தண்டும் கழிவு கழிக்க வேண்டும்.
6. அவற்றில் குறைபாடு இருப்பின் எமது சபை வருமான உத்தியோகத்தரின் தீர்ப்பே இறுதி முடிவானது.

## 11. துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு

துவிச்சக்கர வண்டி அனைத்தும் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தப்படல் வேண்டும். அதற்கான ஒழுங்கைக் குத்தகைக் காரரே செய்தல் வேண்டும்.

1. துவிச்சக்கர வண்டி ஒன்றுக்கு... 1/-
   பூட்டில்லாத துவிச்சக்கர வண்டி ஒன்றுக்கு... 2/-
2. மோட்டார் சைக்கிளுக்கு... 2/-

## 111. சந்தைக் கட்டட வாடகை

1. மேடையில் ஒருவருக்கு ஓர் இடத்துக்கு 15/- ரூபா நாள் ஒன்றுக்கு.
2. மேடையில் வியாபாரம் புரிவோர், குத்தகைக்காரருக்கு அறிவிக்காமல் தொடர்ந்து ஒரு கிழமைக்கு வரத்தவறின் அந்த இடம் வேறு ஒருவருக்கு எமது சபை உத்தியோகத்தரால் வழங்கப்படும்.
3. கடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 25/- ரூபாவும் கடை நடத்துபவர்கள் பூட்டியுள்ள நாள்களுக்கும் குத்தகைக் காரருக்கு பணம் செலுத்தல் வேண்டும். அத்துடன் அறிவித்தல் இன்றி ஒரு கிழமைக்கு கடை பூட்டியிருந்தால் மறு அறிவித்தல் இன்றி சபை உத்தியோகத்தரால் வேறு ஒருவருக்கு வழங்கப்படும்.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
23.10.2001

**க.மணிபல்லவராஜன்**
ஜே.பி.யூ.எம்.,
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.
(C/18828)

# துயர் பகிர்கின்றோம்



எமது சக தோழன்
த. பிரகாஸ் அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
**சோதிலட்சுமி (தேவி) தம்பிரத்தினம்**
அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு துயரில் மூழ்கியிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*தரம் 10F மாணவர்கள்,*
*யாழ்.இந்துக் கல்லூரி.*
(93774)

# 19ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
***அப்புக்குட்டி சுப்பிரமணியம்***
ஆண்டவன் அழைப்பு 24.10.1982



அன்புத் தந்தையே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து 19 வருடங்கள் கடந்தோடியும், உங்கள் அன்பு என்றும் எம்மனதில் நிலைத்திருக்கும். எம்மை உங்கள் பாசத்தால் ஊக்கப்படுத்தித் தைரியம் தந்த அன்புத் தெய்வமே! நீங்கள் என்றும் எம் நினைவில் நீங்காது வாழ்வீர்கள்.

சு.ரவீந்திரநாதன் (மகன்)
*(இலங்கை மின்சாரசபை)*
*கனகரத்தினம் வீதி,*
*அரியாலை.*

பிரிவால் துயருறும்:
மனைவி (லண்டன்),
மருமகன் (லண்டன்),
லோகன், இந்திரன் (மகன்மார்),
லோகேஸ்வரி (மகள்).
(93775)

### அதிகாரிகளின் இடமாற்றங்களை ரத்துச்செய்ய முடியாது

# தேர்தல் ஆணையாளரின் உத்தரவை ஏற்க மறுக்கின்றார் பொலீஸ்மா அதிபர்!

கொழும்பு,ஒக்.24

பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் செய்யப்பட்ட பொலீஸ் உயரதிகாரிகளின் இடமாற்றங்களை ரத்துச் செய்யுமாறு தேர்தல் ஆணையாளர் விடுத்த உத்தரவை ஏற்பதற்கு பொலீஸ் மா அதிபர் மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் ஆணையாளரின் பணிப்புரையை ஏற்பதற்கு பொலீஸ்மா அதிபர் மறுத்தால், உடன் நீதிமன்றத் தலையீட்டைத் தாங்கள் நாடப்போவதாக முன்னாள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கூறியிருக்கின்றார்.

அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையிலேயே -

சுமார் அறுபது உயர் பொலீஸ் அதிகாரிகளின் இடமாற்றங்களையே ரத்துச் செய்யும்படி தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க பொலீஸ்மா அதிபரைப் பணித்திருக்கின்றார்.

ஆனால் அந்தப் பணிப்புரையை ஏற்க பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு மறுத்துவிட்டார்.

"எனது வேலை என்னவென்று எனக்குத் தெரியும். அதில் தேர்தல் ஆணையாளர் தலையிட முடியாது. பொலீஸ் சட்டத்தின் கீழ் எனக்கு அதிகாரங்கள் உள்ளன" - என்றார் பொலீஸ்மா அதிபர்.

ஆனால் -

"நாட்டின் எந்தச் சட்டத்திலும் முதன்மையானதும் மேலானதும் அரசமைப்புச் சட்டமே. மற்றைய சட்டங்கள் அதற்குப் பின்னர் இரண்டாவது தரமுடையனவே. தேர்தல் ஆணையாளர் அரசமைப்புத் திருத்தத்தின் கீழான அதிகாரங்களையே பயன்படுத்துகின்றார். சாதாரண - இரண்டாந்தர - சட்டங்கள், அரசமைப்பின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் மீது மேலாதிக்கமுடையன வல்ல" - என்று அரசமைப்பு நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். (உ)

## ஐ.தே.கட்சி தலைமையகம் மீது நேற்று அதிகாலை குண்டு வீச்சு

ஐதேகட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தா மீது நேற்று அதிகாலை 2 மணிக்கு கைக்குண்டு வீச்சு இடம் பெற்றுள்ளது.

அலுவலகத்தின் முன் பகுதியில் வீழ்ந்து வெடித்த குண்டால் இரு அங்குல ஆழத்துக்கு குழி ஒன்றும் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அங்கு பணியில் இருந்த பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி காயமடைந்தார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற இரசாயனப் பகுப்பாய்வாளர்கள், அந்தக் குண்டுச் சிதறல்களை பரிசோதனைக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்துப் பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.(க-3)

## இ.தொ.கா. 6 மாவட்டங்களில் ஐ.தே.கவுடன் இணைந்து போட்டி

கொழும்பு,ஒக்.24

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இ.தொ.காங்கிரஸ், ஐ.தே.கட்சியுடன் இணைந்து 6 மாவட்டங்களில் போட்டியிடவுள்ளது.

நேற்றுக்காலை ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன நடத்திய பேச்சுக்களின் போதே இந்த இணக்கம் காணப்பட்டதாக ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நுவரெலியா, மாத்தறை, இரத்தினபுரி, கண்டி, பதுளை ஆகிய ஆறு மாவட்டங்களிலேயே ஐ.தே. கட்சியுடன் இ.தொ.கா. இணைந்து போட்டியிடும் என்றும் -

ஏனைய மாவட்டங்களில் இ.தொ. கா. தனித்தே போட்டியிடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (க-4)

### மாதகலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களின சடலங்கள் பிரேத பரிசோதனையின் பொருட்டு கொழும்புக்கு அனுப்பப்படவிருப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் மரணம் தொடர்பான விசாரணைகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. (க-4-9)

### மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை நீடித்த இந்தப் படை நடவடிக்கையில் புலிகளின் முகாம் ஒன்றைத் தாக்கி அழித்துவிட்டு படையினர் தமது நிலைகளுக்குத் திரும்பியதாகவும்-

இந்தத் தாக்குதலில் அதிரடிப்படை சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகவும -

புலிகள் தரப்பில் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் -

ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்தச் சம்பவம் குறித்து புலிகள தரப்பில் உத்தியோகபூர்வமாகத் தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை. (க-3-4)


கணக்கீடு
நீ.நடராஜவாசன் B.B.A.[F.M.Spl]
A/L. 2003
சொத்துவிற்பனை
SAT., SUN. 9 - 10a.m.
ஆரம்பம் :27.10.2001 →10 a.m.
விக்னா கல்வி நிறுவனம்
(93772)


### துப்பாக்கிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்த இளைஞரின் கைகளைக் கட்டி பொலீஸார் தமது வாகனத்தில் ஏற்றிச்சென்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர் என்று கூறப்பட்டது. ஊரெழு மேற்கைச் சேர்ந்த செல்லத்துரை குகராஜா (வயது 23) என்ற இந்த இளைஞரே இடுப்பில் படுகாயமடைந்துள்ளார்.

பொலீஸாரின் பாதுகாப்புடன் அவர் வார்ட்டில் சிகிச்சை பெற்று வருகிறார். (க-10-15-ரி)

### ஷெல்வீச்சில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு:-

தும்பன்கேணியைச் சேர்ந்தவர்களான கே.சிவநேசராஜா (வயது 52), எஸ்.கஜன் (வயது 5), கமலேஸ்வரி (வயது 30) மற்றும் அம்பிலாந்துறையைச் சேர்ந்தவர்களான எஸ்.பத்மநாதன் (வயது 25), கே.சீவரத்தினம் (வயது 38), ஏ.புனிதராஜா (வயது 13), சிவலிங்கம் பரமேஸ்வரி (வயது 20), சதாசிவம் வனதா (எட்டு மாதம்).

காயமுற்றோர் முதலில் களுவாஞ்சிக்குடி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் மட்டக்களப்பு போதனா ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (உ-3-4)

### வவுனியாவில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டார் என்றும் பொலீஸார் கூறினர்.

காயமடைந்த பொலீஸார் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் சம்பவம் இடம் பெற்ற இடத்தில் விசாரணைகளை நடத்தினார். (க-164-4)

### கொழும்புக்கு வந்தார் வரதர்!

இந்தியாவில் தங்கியிருந்த ஈ.பி. ஆர்.எல்.எவ் (வரதர்அணி) தலைவர் மு.வரதராஜப்பெருமாள் நேற்று முனதினம் கொழும்பு வந்து சேர்ந்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்காகவே இவர் கொழும்பு வந்துள்ளார் என்றும் -

தமது கட்சி எந்தெந்த மாவட்டங்களில் போட்டியிடும் என்ற விவரத்தை இவர் மிக விரைவில் அறிவிப்பார் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.(க-4)

### பயங்கரவாதச் செயல்கள் தொடர்பாக

## தேடப்படும் தமிழ் இளைஞருக்கு நீதிமன்றம் முன்பிணை அனுமதி!

பயங்கரவாத புலனாய்வுப் பொலீஸாரால் தேடப்பட்டு வருவதாகக் கூறப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் தாம் கைது செய்யப்படலாம் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில் முன்பிணை அனுமதி வழங்குமாறு கோரித் தாக்கல் செய்த மனுவை வவுனியா நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு அவருக்கு நேற்று முன்பிணை அனுமதி வழங்கியது.

பயங்கரவாதப் புலனாய்வுப் பொலீஸாரால் தேடப்பட்டு வருவதாகத் தெரிவித்து 15 பேரின் படங்கள் நேற்றுமுன்தினம் தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் பிரசுரமாகியிருந்தது. அதில் உள்ளவர்கள் குறித்து தகவல் தரும்படியும் கோரப்பட்டிருந்தது.

அந்தப் படங்களில் காணப்படுவதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரே, தாம் எதற்காகத் தேடப்படுகின்றோம் என்று தெரியாத நிலையில் கைது செய்யப்படுவதிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காக, முன்பிணை அனுமதியை நீதிமன்றத்திடம் கோரினார்.

அவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட முன் பிணை மனுவை பரிசீலித்த நீதிவான் எம்.இளஞ்செழியன், அவரை 25ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

நீதிமன்றத்தின் அனுமதியின்றி இந்த இளைஞரை கைதுசெய்யவோ, விசாரணை செய்யவோ கூடாது என்று பயங்கரவாதப் புலனாய்வுப் பொலீஸ் பிரிவுப் பணிப்பாளருக்கும் வவுனியாப் பொலீஸ் தலைமையக இன்ஸ்பெக்டருக்கும் நீதிவான் பணிப்புரை விடுத்தார்.

பயங்கரவாதம் தொடர்பாகத் தேடப்படுவதாகக் கூறப்படும் ஒருவருக்கு வவுனியா நீதிமன்றம் முன்பிணை அனுமதி வழங்கியது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## கொழும்பில் பரவி வரும் 'அந்திரெக்ஸ்' கிருமிப் பீதி!

'அந்திரெக்ஸ்' கிருமி பற்றிய பீதி கொழும்பில் வேகமாகப் பரவி வருகின்றது.

கடந்த வெள்ளியன்று கொழும்பில் உள்ள அமெரிக்க, ஆஸ்திரேலியத் தூதரகங்களுக்கு வந்த இரு கடிதங்களில் வெள்ளைப் பவுடர் மா போன்று காணப்பட்ட பதார்த்தம் 'அந்திரெக்ஸ்' கிருமியாக இருக்கலாம் என அஞ்சப்பட்டது.

பின்னர் கடந்த திங்களன்று கொழும்பில் உள்ள பிரான்ஸ் மற்றும் இந்தியத் தூதரகங்களுக்கு இதே போன்ற கடிதங்கள் கிடைத்துள்ளன.

இக்கடிதங்களில் வந்தவை 'அந்திரெக்ஸ்' கிருமியைப் பரப்பும் தன்மை உடையனவா என்பதை உறுதி செய்வதற்காக அவை ஆய்வுகூடப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன. முடிவுகள் இன்னும் வரவில்லை.

இதனிடையே -

கொழும்பில் உள்ள ஐ.நா. அபிவிருத்தித்திட்ட அலுவலகத்துக்கும் நேற்றுமுன்தினம் இரவு இதேபோன்ற கடிதம் ஒன்று வந்துள்ளது.

கடிதத்தை உடைத்த அதிகாரிக்கு 'அன்ரிபயற்றிக்' மருந்துகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. அந்தக் கடிதம் உடைக்கப்பட்ட அறை 'சீல்' வைக்கப்பட்டு மூடப்பட்டுள்ளது. கடிதத்தில் வந்த பொருள் குறித்து ஆய்வு கூட அறிக்கை வந்த பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் கொழும்பில் பிரபல கல்லூரி ஒன்றின் அதிபருக்கும் இத்தகைய 'அந்திரெக்ஸ்' கிருமியைக் கொண்டது எனக் கருதப்படும் கடிதம் கிடைத்திருப்பதை அடுத்து சம்பந்தப்பட்ட கல்லூரிச் சமூகத்தினரிடையே பீதியும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ளூர் பொலீஸ் நிலையம் ஒன்றுக்கும் இத்தகைய கடிதம் வந்ததாகவும் - அந்த விடயத்தைச் சம்பந்தப்பட்ட பொலீஸார் கவனத்திலேயே எடுக்காது அதை உதாசீனம் செய்து ஒதுக்கிவிட்டதாகவும -

இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-4)


# நெஞ்சகலா நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

(31ஆம் நாள்) (9ஆம் ஆண்டு)

தோற்றம் 17 ★ 09 ★ 1931



மறைவு 25 ★ 09 ★ 2001

தோற்றம் 24 ★ 12 ★ 1931



மறைவு 19 ★ 04 ★ 1992

அமரர்
**வேலுப்பிள்ளை சிவராசா**
(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

திருமதி
**சிவராசா சிவபாக்கியம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

*பாசமும் நேசமும் கொண்டு பாரினில் வாழ்ந்த உங்களை*
*எங்களால் மறக்க முடியவில்லையே!*

**உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**எங்கள் அன்புத் தந்தையாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிகள் பல புரிந்தும் எம் துயரில் பங்குகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

*- பிள்ளைகள்:*

*மூளாய் வீதி,* சி.கிரிதரன் *(தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)*
*வட்டுக்கோட்டை.* சி.சிவமலர் *(உபஅதிபர், யா/மூளாய் சைவப்பிரகாச வித்தி.)*
(C/18820) சி.கௌரிதரன் *(ஆசிரியர், யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம்)*



வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!
தீபாவளியை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
இன்றே நாடுங்கள்
லைடன் புடவை நிலையம்

இன்று 24.10.2001 முதல் 14.11.2001 வரையும் சகலவிதமான புடைவைகளுக்கும் விசேட கழிவு வழங்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

லைடன் புடவை நிலையம்,
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P. - 2381 (C/18832)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.